பகவத் கீதை - செய்யுள் வடிவில் பண்டைய தமிழ் மொழிபெயர்ப்பு

ஸ்ரீமத் பகவத் கீதையை சுமார் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் முன்னர் ஸ்ரீ பட்டர் என்பவர் தமிழில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்திருக்கிறார். அதற்கு "பரமார்த்த தரிசனம்" என்று பெயர். அது ஒரு நூறு ஆண்டுகளுகு முன்னர் விய வருஷம் சித்திரை மாதம் சென்னையில் மெமோரியல் அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதை மொழிபெயர்த்த பட்டர் என்பவர் அத்வைதி என்று தெரிகிறது. 18 அத்தியாயஙகளும் உள்ளன. இறுதியில் அவர் கோவிந்த பகவத் பாதரையும், சங்கர பகவத்பாதரையும் புகழ்ந்து வணங்குகிறார். அப்பாடல் கீழ் வருமாறு உள்ளது

வேதநூல்களின் முடிவினை வியாதனின் பின்னால்
ஓத மாக்கடல் உலகில் உண்டாக்கிய உரவோன்
கோதிலா நெறி உணர்ந்த கோவிந்த மாமுனிவன்
பாத தாமரை பற்றி வீட்டின்பமே அடைந்தான்.

ஆற்றியல் வழுவிய புலன்கள் ஐந்தையும்
மாற்றிய சங்கர பகவத் பாதன் என்று
ஏற்றிய பெயரினான் அருளினால் யான்
சாற்றினன் இப் பெருநூலையே.

என்று இவர் பாடியிருப்பதால் இவருக்கு சங்கரபகவத் பாதாளிடம் உள்ள அன்பும் பக்தியும் தெள்ளென விளங்கும். இந்நூல் படிப்பதற்க்கு எளிமை பொருட்டு சந்தி பிரித்து இவ்வரிசையில் விரைவில் வெளிவரும்

ஸ்ரீ-பட்டரவர்களால்
மொழிபெயர்த்தருளிய
பரமார்த்ததரிசனமென்னும்
பகவற்கீதை

இஃது
சமிவனக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்

ஸ்ரீ - முத்துராமலிங்க சுவாமிகளிய
ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ - சிதம்பரசுவாமிகள் பாதசேகரரான
பொன்னம்பலசுவாமிகளால்
பரிசோதிக்கப்பட்டு
கொத்தமங்கலம்.
சி.அ.சு. செல்லப்ப செட்டியார்
சி. ராம. அ. இராமன்செட்டியார்
இவர்கள் வேண்டுகோளின்படி
ஷை கோயிலூர். ஸ்ரீ - சிதம்பரசுவாமிகள்
மாணாக்கர்களிலொருவராகிய
அ. இராமசுவாமிகளால்
சென்னைஃ மிமோரியல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

# பகவற்கீதை

## பாயிரம்

பாதியோர்பெண்மையான் பரிந்து பெற்றதோர்
சோதியாங் களிற்றினைத் தூ ரமண்மையிற்
பேதியாதுளம்பெறப் பேணிப் பகவற்
கீதையான் மொழிகுவன் ஞானங் கிட்டவே. (க)

சேயமாமதுரை நின்றுஞ் சேமமாநகரந்தேடி
யானார்பட்டனாரா யவதரித் தருளினாலே
போயநான்மொழிந்த கீதைப் புலப்படுத்ததுவுமின்றித்
தூயமாதவர்க்குகிந்தச் சுருதிநூறொடங்கினாரே. (உ)

வேறு.

அரியயனோடரனாகி யகிலந்தன்னை யாக்கி யளித்தழிக்கின்றவ
த்தைக்த்றுங், கரியதுவாய்க்காந்தத்தினிரும்புபோலக்
கரணத்தின்சலனத்துக்கேதுவாகி, வரியமருமரவணைமேனெளியவேறி
வைகுண்டத் தினிதமரு மாயோன் மண்மேற்
பரிபுணருமணி நெடுந்தேர் பார்த்தற் கூர்ந்த பாண்டவர்கள் சாரதி நாம்
பரவுந் தெய்வம்.(ங)

வேறு

ஒருபதமடித்தொருபதம் பொற்றேர்மிதித்
தொருகையிற்குசை கசையொருகை ஞானமாய்ப்
பொருகைவில்விசயனைப் புரிந்து நோக்கிமெய்
தருபொருளுரைத்தவர் சரணம் போற்றுவாம். (ச)

வேறு

ஐவகைப்பொருளு நான்குகரணமுங் குணங்கண்மூன்றுஞ்
செய்வினையிரண்டுமொன்றி யாவருந்திகைப்பநின்ற
பொய்யிருளகல ஞானப்பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளராழிச் □நூகட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம். (சி)

மன்னருள்விசயன்கேட்ப வாளமரதன்மேலிட்டு
மின்னவிர்படைக்கை மாயனுரைத்த மெய்ப்பொருளை யெல்லாம்
பன்னருமறைகள் கோத்த பழமுனி பணித்தவண்ண
மென்னறிவளவினாலே தமிழினாலியம்பலுற்றேன். (சு)

வேறு

உன்னுநான்மறை மால்வரை யுச்சிமேன்
மன்னுமேகமுழக்கிய வாக்கினைப்
பன்னுசீர் பரமார்த்த தரிசன
மென்னுநாமத்திதனை யியம்புவாம். (எ)

வேறு

விண்ணியன் மொழியினால் வியாதன்கூறிய
புண்ணிய கதையை நீ புகல்வதென்னெனி
லெண்ணியவகை பிறிதில்லையானுமிந்
நுண்ணியபொருளிலே நுழையவேண்டியே (அ)

முதலாவது
சோக அத்தியாயம்

புண்ணியபூமியென்று புகழ்குருபூமிதன்னி
னண்ணியபின்னை நண்ணாதெவர்களுநமருமாங்குக்

கண்ணியதெதனையென்று கண்ணிலாவரசன் கேட்பத்
தண்ணியவினியசொல்லாற் சஞ்சயனுரைக்கலுற்றான். (க)

போர்முகமாகிநின்ற புல்லலர்படையைப்பார்த்துக்
கார்குகவுழவனாய கலைமறையவனை நோக்கி
வார்முரசதிருந்தானை வாளரவுயர்த்த தோன்றல்
லேர்முகின் முழக்கமென்ன வின்னணமியம்புமன்றே. (உ)

வீமனையும்விசயனையு நிகர்தருபோர்வில்லாட்க
ளேர்மருவுசிலையபிமனுள்ளிட்டா ரெனப்பலருந்
தார்மருவு தலைவர்களாய்த் தலைப்பெய்த தானையினை
மாமருவு பெருந்தேரோய்பாரென்றுமறித்துரைப்பான். (ங)

வேறு

கங்யைள்பெறு காதலனும்புக
ழங்கர்கோனென தாருர்த்தோழனு
நங்கள்வாழ்துணை நம்பியுநீயுமற்
றிங்குளாருயிரென் பொருட்டொக்குநீர் (ச)

அன்றியேயு மரசரனேகரால்
வென்றியேதிரு வல்லது வேண்டல
ரொன்றியேதமெமக் குறுமேலுயிர்
பொன்றியேயது போக்குதன்மேற்கொண்டார். (ரு)

எய்தவெங்கள் பிதாமகனேவலாற்
கைகொள்கின்ற கடற்படைகண்ணுறில்
வெய்யவீமன் வியப்பொடுகாத்திடு
மைவர்தம்படைக்காற் றவற்றகுமோ. (சு)

மேல்வகுத்திவர் காமின்விரைந்தெனு
மேல்வயிற்றிற லியாதவர்தம்மொடுங்
கால்வளைத்த சிலைக்கங்கையாண்மகன்
வால்வளைத்திர டன்னையும் வாய்வைத்தான். (எ)

வஞ்சர்செய்த வினைமறலிக்குண
வெஞ்சமம்விளைத் தென்னவும்வேந்தர்கோ
னெஞ்சமுண்மகிழ் வெய்தவுநேரலா

ரஞ்சவுங்கனன் றார்த்தனனார்க்கவே. (அ)

வேறு

ஆர்த்தனவளைகளெங்கு மதிர்ந்தனபல்லியங்கள்
போர்த்திரட்படைநின்றார்ப்பப் புவனமீரேழும்பூத்த
தீர்த்தனுந்தன துசங்கைச் செங்கையால்வாங்கிக்கொண்டு
கார்த்திரண்முழக்கமென்னக் கடல்கிளர்ந்தார்த்ததென்ன (க)

வேறு

வையநைத்தையும் வாரிமுன்வைக்குஞ்
செய்யதிருப்பவளத்திடைவைத்தா
னைவரெனக்கு யிராதலினாலே
யுய்வதுமக்கிலை யென்பதையொத்தே (க)

தருமனடல்வீமனருச்சுனனகுலசகாதேவன்
றிருமருவுவிசயம்ப வுண்டரந்தே வதத்தமெழின்
மருவுசுகோடகமணிபுட்பகத்தோடு மெனவிவற்றி
னுருமனையகுரலெதிர்ந்தார் செவிபுதைப்பவூதினார். (கக)

வேறு

ஒன்றலாதுபலவூதினார்கள் பலரூதும்வால்வளையினோசைபோய்,
நின்றகௌரவர்கணெஞ்சையூடுருவி யஞ்சவானினுநிரம்பிமேல்,
வென்றிசேரமர்தொடங்கும் வேலையினில் வெள்ளைமாநடவுதே ரின்மே,
னின்றபோர்விசயனொன்றுமாயனெதிர்நில்லலாமையொ டுசொல்லுவான்.
(கஉ)

யாவர் போர்கருதியெய்தினார்களெதி ரெய்திநின்றவிவர்தங்களில்,
யாவரோடமர் தொடங்கலாமென வறிந்துகொள்வளவுமியா வையுங்,
காவல்பேணியவைதந்துபின்னவை கரந்துகொண்டருள் செய்கண்ணனே,
மேவநீகடவுமாகொடேரினை நிறுத்துவாயென விளம்பினான்.
(கரு)

விளம்புமவளவின் மேகவண்ணனுமவ் வெள்ளைமாநடவுதே நினைக்,
களங்கொளும்பரிசு நின்றதானைநடு வேகடாவியிதுகானெனா,
வளங்கொள்கங்கைமகனாதியாகமுடி மன்னரியாவரையு முன்னுறாத்,

துளங்குகின்றமொழியோடுநெஞ்சினொடு வல்லவாறுசில சொல்லினான்.
(கச)

வேறு

தாவிலருந்தந்தையருந் தந்தையர்தந்தந்தையரு
மேவியுடன்பிறந்தாரு மெய்ஞ்ஞானமளித்தாரு
மாவியெனநட்டாரு மான்றோருமமர்க்களத்தே
மேவியவெம்பொருட்டாக வீடுவான்றொடங்கினார். (கரு)

வேறு

தீதறுசிறுவர் மற்றவர்கள்சேய்களு
மாதுலரிவர்களோ மாய்கின்றாரெனக்
காதல்செய்திடரினாற் கலக்கமுற்றவன்
மாதவனெதிர்சில மறித்துங்கூறுவான். (கசு)

வேறு

வாயேயன்றிமுகமலராமன மொன்றுணரமாட்டாது
தீயேயென்னவுடல்வெதும்புஞ் செவ்வேநிற்கமாட்டுகிலேன்
வெயேதருதிண்காண்டீபவில்லு நழுவிவிழாநின்ற
தாயேயனையாய்போர்நின்ற தமரைக்காணுந்தொறுமென்னே.

ஓதலாகாநிமித்தங்க ளொன்றேயல்லப்பலவுளவாங்
காதலாரைக்கொன்று பெறும்பயனோவொன்றுங்காணேனா
னாதலாலிவ்வென்றியுட னரசினுரிமையானதனை
யேதலாவதென்கின்ற தியாதின்பொருட்டோவியம்பாயால். (கஅ)

அரசவ்வரசால்வரும் போகமதனாலின்பமெய்துமென [வர்
வுரைசெய்பொருள்களியாவர்சிலர் பொருட்டாலுலகருழைந்தடை
வரைசெய்யுயனேமற்றாவர் தம்பொருளுந்தங்கள்வாணாளு
நிரைசெய்தொருவரொாவரின் முன்னிற்கவந்துநின்றாரால். (கக)

ஆனபொருளீதாதலினா லவரைக்கொன்றலருள்சேரா
தீனமன்றியெங்களுக்கோரின்ப மெங்குமில்லையாற்
கூனவரிவிற்கொண்டென்னைக் கொலினுமவரையான்கோறல்
வானம்பெறினுமாட்டேனான் மண்ணின்பொருடால்வல்லேனோ.

கொற்றவர்தங்குலங் கெடுத்தால்வருகின்றகுற்றமுமெய்
யுற்றவர்தந்நிறம் பிழைத்தாலுறுகின்றவுயர்பழி
மற்றவர்களறியாது மறந்திடுகமறந்தாலுங்
குற்றமெனவறிந்தநான் குறிக்கொள்ளாதொழிவேனோ. (உக)

குலங்கெடவேவருகின்ற குலதருமங்கேடுதரு
நலங்கெடவேகுலம் பாவநண்ணுமதுநண்ணவே
யிலங்கிழையார்நெறி திரிவரிவர்கணெறிதிரியவே
தலங்குலவுகுலமெல்லாந் தலைதடுமாறாகுமால். (உஉ)

தடுமாற்றமக்குலத்தே சார்ந்தவர்க்குஞ்சாராதே
கெடுமாற்றநினைந்தவர்க்குங் கெடாநிரயங்கிடைப்பிக்கும்
படுமாற்றாமென்னுரைக்கேன் பண்டிறந்தோர்களுந்தமக்கொன்
றிடுமாற்றலவர்கள்பெறா திருணரகத்திழிவர்களால். (உங)

வேறு

வாராநின்றகுலமயங்கப் பண்ணினார்க்குமற்றதனைச்
சாராநின்றகுலத்திற்குந் தருமந்தளர்ந் துசாயுமாற்
சாராநின்றகுலந்தருமமிரண்டுந் தளர்ந்துசாயவே
பேராநிரயமெய்துமெனப்பெரியோரெல்லாம் பேசுவரால். (உச)

மின்னேயனையசெல்வத்தைவேண்டித் தங்கண்மெய்யுயிரைக்
கொன்னேகழிக்கநின்றவரைக் கொல்லத்துணந்தகொடுவிணையே.
னென்னேகொடியபெரும்பாவமெய்த நினைந்தேன்யானுமிவர்
முன்னேபடைவிட்டமர்துறந்து நின்றாலிவர்கண்முனிவோடும்.

வேறு

கொல்லினுமெனக்கிது பொதுக்கைகுணமென்றே
கல்லினிகர்தோள்விடலை கண்ணனெதிர்கூறி
வில்லினுடனேபகழி சோரவிழிசோரச்
செல்லுமணியாழியணி தேர்மிசையிருந்தான். (உசு)

முதலாவது சோக அத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது

சாங்கியயோக அத்தியாயம்

இவ்வண்ணமறிவொதுங்க வெழுகின்றவிரக்கத்தாற்
செய்வண்ணமறியாது திகைச்ச்திருந்ததேர்விசய
னுய்வண்ணமதுநாடியொரு வண்ணமுலகோதுங்
கைவண்ணமலருடையகார் வண்ணன்கட்டுரைப்பான்

வேறு

ஆயாதவர்க்குமலிகட்கு மடுப்பதழியாப்பழியுனது
தேயாவறிவைத்தேய்ப்பதறச் சிறுமைகளிலேசிறுமையது
சாயாநரகத்திடைசாய்ப்பதுன் போல்பவர்க்குத்தகாததீ
தேயாநிலத்தேயுனையையாவெவ் வாறடைந்ததெனவறியேன்.

வேறு

ஒவ்வாதீதொழிந்தமர்மே லொருப்படுகென்றுருக்கரிய
செவ்வாயன்றிருமொழியத் தேர்விசயன்செப்புவான்
மெய்வாயினொடுமனத் தான்மிகப்போற்றற்குரியானா
யெவ்வாறுகொலை புரிவேனென்றிவாறியம்பினான்.

மாற்றலர்களென்றிவரைக் கொன்றுபெறும்பெருவாழ்வி
லேற்ற்முரைத்தியான்பிறர் பாலிரந்துண்கையினிதன்றோ
கூற்றவர்களுயிருண்டாலவர் குருதியாற்குழைத்த
சோற்றையினியல்லவோயான் பின்னைத்துய்ப்பதெலாம்.

தவர்கொள்படைவிடுகையோ தவிர்கையோதகுவதுமற்
றவர்களெனைவெல்வரோயான் வெல்வனோவறியே
ணிவர்கள்சிலரிறந்தக்கா லதனாலேயென்னுயிர்போ
மவர்களமர்தொடங்குக வென்றடல்குறித்துநின்றாரால். (ரு)

ஆதலாலறிவாயவிழியினை மற்றாங்கவர்பாற்
காதலாமிருண்மறைப்ப நெறியெங்குங்காணேனா
னாதலாலெனக்குறுவ தறிகிலேனுரைத்தருள்வாய்
சாதலானதும்பிறப்பு மில்லாததனிமுதலே. (சு)

வேறு.

உஞ்சேபோகுநெறிவாளா வுரைப்பனோவென்றுளங்கருதிற் [ண்
றஞ்சேயென்றுன்சரண்புகுந்தேன் றண்டிற்பணிந் தேன்றாமரைக்க
மஞ்சேயுன்றன்மாணாக்கனாயுன் பாதமலர்புனைந்தே
னஞ்சேலென்றிங்கடியேன் செய்வினைகளேவியருள்புரிவாய். (எ)

வேறு

மண்ணாளும்பெருஞ்செல்வ மன்றியேமாயாத
விண்ணாடுபெற்றிடினு மென்னுடையமெய்யுணர்வு
நண்ணாமலடுதுயர நலியாமற்காப்பதனைக்
கண்ணாவிங்கெவ்விடத்துங் காண்கிலேனெனக்கலுழ்ந்தான். (அ)

நெய்மார்பிற்சொரிவதென நெடுங்கண்கர்சோர
விம்மாநின்றவன்காதல் வெந்தீயால்வேவாமே
கைம்மாறொன்றின்றியுயிர் காக்கவேகடன்பூண்ட
வம்மாயன்றிருவாய்மை யருண்மாரியாலவிப்பான். (க)

வேறு

மின்னையனையதிருநகை கொண்டருளிவிரைத்தாமரைநாறும்,
பொன்னையணியுந்திருமார்பன் போகாத்துயர்பொம்பரிசெண்ணி,
முன்னைமறைகளெடுத்துரைத்து முடியாப்பொருளை முதற்பொருளாந்,
தன்னையுள்ளபரிசவற்குத் தானேசாற்றத் தொடங்கினான்.

வேறு

சாவதிலையாவர்களு நிற்கவதுதானே
மாய்வரெனநீகருது மாரதர்களெல்லாந்
தேய்வரியதீவினைசெய் யாதமையினாலே
வீவதன்முன்வானுலக மேவுவர்கண்மேன்மேல். (கக)

அன்னவர்கள்சோகித, ரெனாவழுதலாலும்
பன்னவரியோர்கண்முறை யேபகர்தலாலு
மன்னமயலேறியுண் மயங்கினை கொல்வாயா
தின்னதொழிலானவை மறந்திடிவையுங்கேள். (கஉ)

மாயுமவராலுமுயிர் வாழுமவராலு

மாயுமறிவோர்களழி யாமையறியாயோ
நீயுமிவர்தாமுநிகர் நானுநெறிதேரி
லேயும்கதையாலுலகி லென்றுமுளமேகாண். (கரு)

பொன்றுவதுடம்பதனு ணின்றபொருள்பொன்றா
தென்றுமோரியற்கையொடு நிற்குமியல்பைக்கேண்
மூன்றொடர்மகப்பருவம் விட்டிளமைமூப்போ
டொன்றுமுடலாயினு மூயிர்க்கியல்பதன்றால். (கச)

அனைவகையாலுரு வழிந்துவருமாங்கே
யென்னுருவமாமறி விறந்துபிறவாதாற்
பின்னதறிவானுட லழிந்துபிரிபோதுந்
தன்னதெனவேதுமோர் சலிப்பதறியானால். (கரு)

இவ்வகையதாகிலழல் சீதமிடரின்பஞ்
செய்வகையிலாவறிவு சேர்குவதெனென்னின்
மெய்வகையினாலிவை விளைந்துரமேய
வைவகையினாயபுல னும்பொறியுமையா. (கசு)

வேறு

சீதமழன்முதலவற்றின் செயல்கேட்கிலநித்தியமாய்ப்
போதலொடுவருவனவா யிருக்குமவைபொறுநீயு
மாதலினாற்பயனென்னி லவைபொறுத்தபெரியோனை
யேதமவைநிலைகலக்கா தவன்வீடேய்துமால் (கஎ)

வேறு

மண்ணினாயவிகாரமுமம்மண்ணே யந்தமண்ணெழித்துப்
பண்ணினாரும்பிறரில்லைப் பண்ணப்பட்டபலபொருள்க
ளெண்ணினாகுவதன்முன்புமிறந்த பொழுதுநிகழ்விடத்துங்
கண்ணினாடின்மண்ணொழியக் கண்டாருளரோகட்டுரைப்பாய்.

வேறு

வையாரயிலுழவாவதன் வகையேதெனவகைகேண்
மெய்யானதுநசியாததனுடன் வேறெனவிரவும்
பொய்யானதுநிகழாதிவை புலனாகியபொருளே

யையாவெனையறிவாரிவை யறிவார்பிறரறியார். (கக௯)

யானும்வகையதுகேளெழு மொலியேமுதலியவும்
வானாதியில்வருபூதமும் வருநாள்வருமிடமா
யானாதெழுமறிவியாவையு மறிகாரணமதுவாய்ப்
போநாளொடுவருநாள்வழி புணராததொர்பொருளே. (உ)

அழியாதவையதுயா தெனிலவிகாரதையுருவா
யொழியாநிறைவொடுநீடிய தெனதியானெனவுணரா
வழியாமதியியலாலிது சிலமாறு கொள்குவதாய்
மொழியாரவியயமாமிதைமுயல் வாற்கொலவலரார். (உக)

இல்லாமையினியல்கே ளெழுகழுதாழியினிடையே
யல்லாதெழுபுனல்போ லறிவுறவேயழிகுவதா
லெல்லாவகையினுமாய் வதிவ்வுரு வேயறிவதுதான்
கொல்லாதழிகொலையானது குறுகாததனெறிகேள். (உஉ)

வேறு

ஊறுபடவொன்றிலே பிறத்தல்பிறந்துளவாதல்
வேறுபடவளர்தல்வளர்ந் தயலொன்றாய்விளைந்தமைதன்
மாறுபடத்தேய்தலற மாய்தலென்வருகின்ற
வாறியல்புமுடம்பன்றி யறிவடையாதாதலினால். (உ௩)

வேறு

நில்லாவுடற்கேநின்றேயு நித்யமாகிய துநாச
மில்லாததுபொய்ப்பிறப்பிறப்பொன் றறியாததுமற்றதுவறிந்தோ
கொல்லார்கொலையேவலுஞ் செய்யார்குலமேலிட்டுக்குலமறைக
ளெல்லாம்விதித்ததொழிலினை யுமியம்பிற்றென்றேயிதுதெளிநீ.

வேறு

பீறியபோர்வையைப் பெயர்த்துப்பின்னரே
வேறியல்போர்வையை விரும்புவாரென
வூறியவுடம்பினி லுதித்தவுண்மைதான்
மாறியோருடம்பினை மருவுமன்னனே (உசு)

வேறு

உருப்பான்மைமற்றத னுக்கொருநாளுமின்மையாற்
செருப்பால்வெம்படைக்கலங்கள் சேதிக்கமாட்டாவா
னெருப்பால்வெந்தழியாது நீரானெக்கொழுகாது
மருத்தாலுஞ்சலியாதுமற்றதன்றன்வகை கேளாய். (உசு)

வேறு

எல்லாப்பொருட்கும்பழையதனை யெங்குந்தானாயிருப்பதனை
நில்லாத்தன்மையில்லதனை நித்யத்துவத்தைநிலைப்பேற்றை
யல்லாப்புலன்கள்பதினாலு மறியாவறிவையறியாதே
யில்லாப்பொருள்போலழியுமெனவிரங்குகின்றதென் கொண்டோ

வேறு

வீவரெனக்கொடுமெய்தளர்வாயேல்
யாவர்பிறப்பவர் யாவர்களேனுஞ்
சாவர்பெயர்த்து மவ்வாறுசனிப்பர்
காவலிதற்குளதோ கடனேகாண். (உஅ)

செறிந்ததிவ்வா றிவரென்பதுந்தேராய்
பிறிந்திவர்போமிடமும்பெரிதோரா
யறிந்ததுநீ நடுவெசிலநாளே
யெறிந்திடுவேலவர் பாலிடரென்னோ. (உக)

வேறு

ஒருவனென்றுங்கண்டறியாதது கண்டாற்போலுணர்ந்திருக்கு
மொருவனென்றுமுரைத்தறியா ததனையுரைத்தாற்போலுரைக்கு
மொருவனென்றுங்கேட்டறியா ததனைக் கேட்டாற்போலுவக்கு
மொருவனென்றுங்கேட்டாலு மறியானிந்தவுண்மையினை. (ங)

திதனாயெவருமறியாத பொருளைத்தெரிந்துகொண்டுநீ
யிதனாலிவரையான்கொன்றே னென்பதொழிவாயின்னுங்கேண்
மதனாலாயமறைமொழியு மன்ன்ர்தருமம்வாளமரென்
பதனாலமரேதொடங்கதனை யறநன்றெனநீயையுறேல். (ஙக)

வேறு

செய்தியின்றியத் தேவர்கள்வானுல
கெய்தநின்ற திதுபெறுவார்கள்கேள்
வைதிகந்தரு மாதவமேற்கொண்டு
மெய்திருந்திய வேந்தர்களல்லரோ. (ஙஉ)

இன்றுவாளமர் தன்னிலெதிர்ந்துநீ
பொன்றில்வானவர் போற்றவிண்காக்குவை
வென்றிசேரிலிவ் வேந்தரெலாந்தொழ
நின்றுஞால மளிக்குவைநீயரோ. (ஙங)

ஆவதான வமர்தொடங்காயெனிற்
போவதான புகழுந்தருமமும்
பாவமாம்பழி யாமிப்பழியினிற்
சாவதானது வேதலையல்லவோ. (ஙச)

அன்றியும்முனை யஞ்சினையென்பரா
னின்றியைந்து நிலத்துமுன்னீசெய்த
வென்றியும்பழி யாய்நிற்குமேவல
ரொன்றியம்பிலின் னாங்கிதன்மேலுண்டோ. (ஙரு)

துற்றவின்பமுந் துன்பமுந்தோல்வியும்
வெற்றியும்மிழ வும்மிகுபேறுமென்
றுற்றவின்னவைக் கொத்தமனத்தனாய்க்
கொற்றவெஞ்சமர் செய்குற்றமில்லையால் (ஙசு)

வேறு

கதுவியபொருண்ஞானங் கரையறுமுரையாலே
பொதுவுறுவகைநீயும் புலனறிகையான
யெதுவொருவினையாலே யிருவினைகளும்வீடு
மதுதனையறிவார்வீ டணைபவரதுகேளாய். (ஙஎ)

அரிதெனுமறிஞோர்தஞ் செயலவழிவாகா
விரிதருமிடையூறும் வினைகளுமிடைகூடா
தெரிபொருள்சிறிதேனும் பெருமயறெறுமானா
லுரியதிவ்வுலகோர்பா லதுவலதுளதோதான். (ஙக)

தெளிபவருணர்வொன்றே தெளிவிலருணர்வோதிற்
றளிர்நிகர்பலவாகுந் தருபயன துமேவு
மொளிமறைநெறிமேலா முணர்பொருளெனவோது
மளியவர்தெளியாதா ரவையலதறியாரால். (ருக)

புண்ணியவுலகத்தே பொருண்முடிவெனவைப்பார்
மண்ணியல்பிறவிக்கே வரும்வழிநெறிநிற்பார்
பண்ணியவினைகட்கே பயனினைபவர்கட்பா
னுண்ணியபொருள்செப்பார் நுணுகியவறிவுற்றோர்.

நவைதருகுணமுப்பா னணுகியபயனுற்றோர்
சுவைதெரிகுணவைப்பார் தொழின்மறைநெறியுற்றே
கனவதருகுணமுற்றோர் கருமமதிடமிற்றா
மவைகெடவருமப்பா லறிவினனெனநிற்பாய் (சக)

குள முதலியவற்றே குளிமுதலியதுய்ப்பா
நளவறுபுனல்பெற்றா லவைகொளலருமைத்தோ
வளமறுகருமத்தால் வருசிறுசுவைவற்றா
வுளமகிழ்பிரமத்தே யுளகொளலெளிமைத்தால். (சஉ)

விடலரும்வகையிற்றாம் வினைப்பயனதுவிட்டே
கடவியவினைமுட்டா வகைசெய்துகழிவுற்றோ
னுடலொடிவ்வுலகத்தே யுளனெனநிகழ்பெற்றே
யிடரிணையறவிட்டானெனை யறிவகைபெற்றான்.

அறிவினையறிகிற்பா யகிலமுமடைவுற்றே
பிறிபொழுதினிலொத்தே பெருவினைதனினிற்பாய்
நெறிதருமறிவொட்டா வகைவினை தனினிற்பார்
சிறியவரெனைமிக்கோர் தெளிபவர்செயலைக்கேள். (சச)

தருபயன துவிட்டே தகும்வினைசெயலுற்றா
லருமலறுமற்றா லறிவுறுமறிவுற்றா
லிருவினைவிடும்விட்டா லிழவொடுபெறுதற்பா
லொருமனம்வருமத்தாலெனையுணர்வுணர்வப்பால் (சரு)

பேதைமையடைவுற்றே பிறிவுறுமனமற்றே
யேதமிறெளிவுற்றா னியாதொருபொழுதப்போ

தோதலொடுலகத்தோ ருரைகளினுளம்விட்டா
னாதலினெனைமெய்ப் பாடடைதருநெறியைக்கேள். (சசு)

வேறு

தலைநின்றபொருளைய மின்றியேசலியாதே
நிலைநின்றான்யாதொரு போதப்போதேநெறிநின்றான்
கலைநின்றமெய்ஞ்ஞானயோகங் கண்ணுறுமென்னச்
சிலைநின்ற தோள்விசய னிவ்வண்ணஞ்செப்பினான். (சஎ)

இவ்வகைவினையினின்றோ னெவ்வகையுரைப்பானந்தச்
செய்வகையிலாதோன்செய்யுஞ் செயல்களென் செப்புமாறென்
மெய்வகையருள் செய்கென்ன விண்ணையேமுதலாய்க்கொண்ட
வைவகைப்பொருளுமீன்ற வலனிவையருளிச்செய்வான். (சஅ)

அறிவினிற்றன்னாலின்புற் றனைத்தவாவினையுநீக்கி
வெறிதருவெகுளிகாம மயக்கநீத்தின்பதுன்பம்
வறிதெழுபொழுதில்வாட்ட மகிழ்ச்சியென்றிவையுமாய்த்துப்
பொறிதருநலனுந்தீங்கும் போற்றல்போற்றாமைபோக்கி. (சக)

ஆனமதன்னுறுப்போரைந்து மதனுளேயடக்குமா போற்
றீமைசெய்புலன்களைந்துந் தன்னுளேசெறியச்சேர்த்தி
வாய்மையுணிகழுமின்னே வழுத்தவும்படுகின்றானாற்
றூய்மைசெய்தவையேநாளுஞ் சொல்லுவதவன்றன் சொல்லால்

குறையுமாப்பிணிப்புற்றாலுங் கொண்டவிப்புலன்களெண்ணி
லறைகடலனையநெஞ்சத்த வாவறானறிவினில்லான்
மறைமொழிபலவுமோதி யடக்குவான் மனத்தைவாங்கிப்
பொறைகெடப்புலன்களைந்தும் பொறியிலேபுகட்டுங்கண்டாய்.

ஆதலாற்புலன்களைந்து மடக்கரிதடங்காதாகிற்
றீதிலாக்கருத்துந்தீய வவற்றிலேசெல்லுஞ்சென்றாற்
காதலாற்புகைந்துவெய்ய காமமாய்க்கொளுந்திக்காம
மேதலாகாமைதீய வெகுளியாயெரிமன்றே. (ருஉ)

எரிநிகர்வெகுளிபொங்க மயக்கம்வந்தெய்துமெய்தத்
தெரிபவைசிதையுமுள்ளந் தெரிந்தவைசிதைந்தபோதே
யுரியதன்னுணர்வுமாயு முணர்வுமாய்ந்தொழிந்தவாறே

யரியவென்றறிஞர்பேசு மனைத்துமாய்ந்தொழியுமன்றே (ருரு)

வேண்டல் வேண்டாமையின்றி மிகைசெலாப்புலன்களாலே
மாண்டபோகங்கடுய்ப்பான் மனங்கலக்குறான்மற்றத்தா
லீண்டியதெளிவுண்டா மாற்றெளியவேயெல்லையின்றிப்
பூண்ட நோய் நீங்கு நீங்கப் புலனிலைநிற்குமன்றே. (ருச)

அடுத்தலைம்புலன்செயாதார்க் கறிவில்லையறிவின்றாக
விடுத்தமெய்யுணர்வின்றாமான் மெய்யுணர்வில்லையாகிற்
றொடுத்தபின்சித்தசாந்தி தோன்றிடாததுதோன்றாதா
லெடுத்தநல்லின்பந்தானு மில்லையேயிசைக்கவேண்டா. (ருரு)

ஆறுசெல்பொருள்கடுய்க்கு மைம்புலனுக்கும்பின்னே
காறொடர்நெஞ்சமந்தப் புலன்றனைக்கலக்குமாங்கே
யூறியகடலுளோடு கலத்தினையுடன்செல்காற்றே
வேறுசெய்தறைந் துமாய்த்து வீழ்த்துமாபோலவேயாம். (ருசு)

யாதொருபொருளையெல்லா வுயிர்களுமிருள்போற்காணா
ரோதருஞானியத்தை யுளங்கையிற்கனிபோற்காணு
மியாதொருபொருளையெல்லா வுயிர்களுமென்றுங்காண்பார்
காதலின்ஞானியத்தைக் கண்ணினாற்றெரியக்காணான். (ருசு)

யாதொருபொருளையெல்லா வுயிர்களுமிருள் போற்காணா
ரோதருஞானியத்தை யுளங்கையிற்கனிபோற்காணு
மியாதொருபொருளையெல்லா வுயிர்களுமென்றுங்காண்பார்
காதலின்ஞானியத்தைக் கண்ணினாற்றெரியக்காணான். (ருஎ)

நீரினானிறைந்துநின்ற கடலிலேநெறிமேற்கொண்டு
நீரினானிறைந்தவாறு விழுந்தனநிறைவுறாது
தேரினாமதுபோலாசை செறிந்தவர்திறமேநோக்கிச்
சாருமாலாகிலத்தை யவர்களுஞ்சலித்தல்செய்யார். (ருஅ)

யானெனதென்பதின்றி யெவ்வகைப்பொருளும்விட்டான்
றானெனச்சரிக்கின்றான்யா ரவனையேபடையுஞ்சாந்தி
யீனமதடையாரித்தை யடைந்தவரிறக்கும்போது
ஞானமேயுடையாரென்னை நண்ணுவார்பிறவிநண்ணார். (ருசு)

வேறு

பின்னையோவிவ் வுலகமெலாம்பெற்ற
வன்னையோதிரு மார்பத்தணைத்தவன்'
முன்னையோர்புகழ் வேதமுடிவையோ
தன்னையோவுள்ள வாறெலாஞ்சாற்றினான்.

இரண்டாவது
சாங்கியயோகவத்தியாயம்-முற்றிற்று

மூன்றாவது
தேவபூசை அத்தியாயம்

அலையிலேகடல்கிடந்து மருமறைகளானவற்றின்
றலையிலேயிருக்குமவன் றேரிலேநின்றருளிக்
கலையிலேபொருளெடுத்துக் காட்டவுமெய்காணாதே
சிலையிலேதோள்விச நிவ்வண்னஞ் செப்புவான்

வேறு

நன்றேவினைன்ஞானமென வுரைத்தாய்மீளவினைநல்ல
தென்றேரையாநின்றனைநா னிவற்றிலெ துநன்றெனவறியேன்
குன்றேயணையாயுனையடந்தேற் குற்றதுயர்நீக்கிடுவதனை
யொன்றேயாகவுரைத்தருள வேண்டுமென்றானவனுரைப்பான்.

ஆதியிலுலகினை யாக்கியன்றுநா
னோதியபொருளிவை யிரண்டுமுண்மையே
தீதியலவாவறான் செயலைமாற்றுவான்
மீதியல்வினையுறான் வீடுமேவிடான்.

ஒருவருமொருபொழி தினுமோர்காலமு
மிருவகைவினைசெயா தவர்களில்லையா
லருமயலவாவறான் வினையடக்குவான்
பருவரலொடுபொய்யே பாவிப்பானரோ.

புலனவைபொறிவழி போக்குமாற்றியே
பலனறவினைகளென் பொருட்டுப்பண்ணுவாய்
நலனுறுமவ்வினை நாசமின்றியே

சலமுறுபிறவியுந் தவிர்க்குந்தன்மைகேள். (ரு)

வேறு

தேவர்களைமகிழ்விக்குஞ் செயலோடேதெரிந்திந்த
மூவகையவுலகையுமுன் படைத்தமுதலவன்மொழிவான்
மேவரியசுரர்பூசை யிதுநீங்கள்வேண்டியன
யாவகையுந்தருமின்ன மிதுகேட்பீரெனவிசைப்பான். (சு)

செயல்வகையானீங்களவர் திறம்போற்றுமாங்கவரும்
புயல்வகையாலுங்களையே புரம்போற்றிப்புரந்தருள்வ
ரியல்வகையான துபிழையீ ரெனிலிரண்டுதிறத்தீரு
முயல்வகையாலெனையடைவீ ரெனநிலத்தோர்க்குரைத்தனனால்.

மற்றவர்தந்ததுகொண்டு மறித்தவரைப்பேணாதார்
கற்றவர்முன்பழித் துரைத்த கள்வரினுங்கடைப்பட்டார்
பெற்றதுகொண்டவர்ப்பேணிப் பிழைத்தகொண்டுண்ணாதே
யுற்றதுதன்பொருட்டாக வுண்பான்றீதுண்கின்றான். (அ)

வேறு

உளவாமுயிருணவாலுண வுயர்மாரியினுளவரம்
வளவான்மழையுயர்வானவர் மகிழ்வால்வருமதுதா
னிளவாளரியனையாயிசை தொழிலல்வருமிதைமீ
தளவாமறைதருமாமறை யறிவாலறிவுறுமால். (க)

இதனால்வினைகளிலே விளைவனயாவையுமிங்னே
திதனால்வரும்வினையாழியி னெறிசேரலர்திரிவார்
மதனாறியபுலனேமகிழ் விடமாகவுமுடையா
ரதனாலவரவமே கழிபவராமெனவறிநீ

வேறு

கண்ணிற்கருதரு மறிவைக்கருதிய வறிவேமிகவரு களிகூர்வோ,
னெண்ணிற்றொழிறருபயனுற்றிடும்வகையிசை யானதலில் வினையாவும்,
பண்ணிற்பெறுவதோர்பயனுண்டோவவை பண்ணா
துறுவதோர்பழியுண்டோ, மண்ணிற்பிறரிவனைவையுற் றிலனென
மதியாரவைசெயவிதியாரால். (கக)

வேறு

ஆதலானீயும்பலத்தின் மேலவாற்றடுத்தகாரியஞ்செய்வாய் வற்றாற்,
நீதிலாவீடேசேரலாமுன்னஞ் சேர்ந்தவரனேகர்பின்றெ ரியிற்,
காதலாலரசன்சனகனேமுதலோர் கருமமோடொழுகியே யன்றோ,
போதராயுலகம்புக்கதேமற்றும் புகுந்தவரநேகர்முன போனார்.

பெரியவர்பயின்றபடியலாற் பயிலார்பின்புளோ ரென்பதன்றாகி,
லுரியவிவுலகமூன்றினுமெனக்குச் செய்யவேண்டுவதுமொன்றுண்டோ,
வரியவையென்னாலுறாதவுமுறுதற்பாலவு மியாவை யிங்கையா,
பரியவிவ்வுலகமகிழ்வுடன் வினைதான்பண்ணுதற்கென்னையும்பாராய்.
(கரு)

என்செயறவிரிலியான்செயாவினை களியாவருஞ்செய்யாராதலி னான்,
மன்செய்தகுலங்கண்மயங்கிமாய்ந்திடுவர் மற்றவர்மற்றதற்காகப்,
பின்செயலறியாதவாவொடுமுயலும்பேதையைப் போற்பிறர்பொருட்டா,
லுன்செயல்களைச்செய்யவைசெய்வார்
தம்மையுணர்வுவேறாக்கலுமொழிவாய். (கச)

மெய்வகைதனக்கும்புலன்கட்குமுள்ல வேறுபாட்டினைமிகவறிந்தோ,
னைவகையியற்கைப்புலன்களேபொறியுற் றழுந்துகின்ற நவெனவசங்கா,
னிவ்வகையறியாதவனிருவினை யுமியான்செய்தே னெனவிளைத்தேங்கு,
முய்வகையிதுநீயுணர்ந்துனக்கடுத்த வினைசெயென்றுரைத்துமீண்டுரைப்பான்.
(கரு)

வேறு

என்பாற்பொறாமைமனைத்தவிர்ந்தென் கருத்தாயுள்ள வினையிதனை,
யன்பாற்பயில்வாரியாவர்சில ரவர்கள்வினைகளறவிட்டா,
ரென்பாற்பொறாமையயானுரைத்தவிதனையிகழ்கிற்பார்களவர், வன்
பார்த்தரைலெழுமரம்போன் மாய்ந்தாரறிவுமாய்ந்தாரோ. (கசு)

பண்டுநின்றபழவினையின்பனி
கொண்டுநின்றவைகூடு மவர்கட்குக்
கண்டுநின்றவர் கற்பனையென்செயு
முண்டுநன்றிதெனா வுறவொண்ணுமோ (களா)

வேறு

அஞ்சுபுலனவை தொடருமஞ்சுபொறியவையாம்
வெஞ்சுரனிலுலறியுயிர்வெம்பி யழிவுறுவோ
ருஞ்சுபுகுநெறி தகையவொன்றுபகையுளகே
ளெஞ்சுதலிலின்ப மிடரென்பவவையிகழ்நீ (கஅ)

தடுத்ததொழில்செய்வது தகாததுதனக்கே
யடுத்ததொழில்செய்துகெடு மேனுமழகையா
விடுத்தகருமம்பெரிது செய்வதனின்மோலோர்
தொடுத்தகருமஞ்சிறிது செய்கைதொழிலென்றான். (கக)

வேறு

மாயனிவைநின்றுரைசெய்ய விசயன்மறித்துங்கூறுவான்
றீயவினைசெய்யாதவரைத் திகைப்பச்செய்துதிறலாலே
யேயபணிகொள்வாரைப்போ லியற்றுவிப்பான்யாரென்றான் [ன்
பாயல்பரவையாய்க்கொண்டபழையோ னிவ்வாறெனப்பணிப்பா

வேறு

தீமனந்தனி லேசெனனன்செயக்
காமமென்னுங்கைத் தாய்வளர்க்கின்றது
வேமயங்கொள் வெகுளியென்கின்றது
நாமமற்றத னன்னலமின்னங்கேள். (உக)

எவ்வகைப்பயனுந் தினவல்லதை
யெவ்வகைப்பெரும் பாவமுமீவதை
யெவ்வகைப்பொருட்கும் பகையாவதை
யிவ்வகைத்தெனக்கூறுவ னின்னங்கேள். (உஉ)

நெருப்பைமுற்றிய தூமமுநீடொளித்
தருப்பணத்தை மறைத்தனமாசும்போ
லுருப்படைத்தன வுள்ளுணர்வியாவையும்
விருப்பமுற்றவெங்காமம் விழுங்குமால். (உங)

காதலாற்றவிக் காமம்புலன்களே
வாயிலாய்ப்புகுந் துள்ளமயக்குவ

தாதலாற்புல னைந்துமடக்கியே
யேத்லாக்கடுங் காமமிறுக்குவாய். (உச)

ஆற்றுமிவ்வுடம்பிற் பரமைம்புலன்
மாற்றுமைம்புலனிற் பரமாமனம்
போற்றும்புத்தியதிற் பரம்புத்தியிற்
றோற்றுகின்றதுகாண்பது தொல்பரம். (உரு)

வேறு

மேலாயுள்ளவிப்பொருளை மெய்யாயறிந்துபொய்யாய
மாலாய்மயங்குமனத்தினையு மடக்கியந்தமனங்கலக்குங்
காலாயுள்ளகாமத்தைக் கரப்பாயென்றுகட்டுரைத்தான்
சேலாயுலகமுறுபுனலோர் செவியின்புரையேசெலுத்தினோன்.

மூன்றாவது
தேவபூசையத்தியாயம் முற்றிற்று.

நான்காவது
சம்பிரதாய அத்தியாயம்

நற்றவநிகழ்தரு கருமஞானமு
மற்றமதறவுனக்கறியக்கூறினேன்
மற்றவைகளின் வரலாறுங்கேளெனக்
குற்றமிலாழியங்கையன் கூறுவான். (க)

எவமறமுன்பியா னிரவிக்கோதினே
னவன்மனுவரசனுக் கறியக்கூறினா
னுவகையோடவனிக்கு வாகுக்கோதினான்
றவமுயலரசரீ தறியுந்தன்மையோர். (உ)

கருதரும்வகைநிகழ் காலஞ்சேறலான்
மருவரும்வகையதாய் மறைந்தவாய்மையை
யிருவினைகெடவரு மியோகநீர்மையை
யொருவருமறிவரி தாயவுண்மையை. (ங)

வேறு

நல்லகாதல்செய் நண்பனுமாயெனை
யல்லதியாவு மறியலையாதலாற்
சொல்லன்மேயினனென் றனன்றூயவன்
மெல்லவேறுவிசயன் விளம்புவான். (ச)

ஞானமாமிது நல்லவர்கேட்டிடப்
போனகாலமும் யான்புகன்றேனென்றா
யானதாகிலு மவ்வுடம்பன்றிது
தானதாம்வகை நீயறிதக்கதோ. (ரு)

வேறு

சொலலார்விசயனிதுமொழியத் துளபமுடியோன்சொல்லுவான்
பல்லாயிரங்காணுடம்பெனக்கு முனக்குநடுவுபரிந்தொழிந்த
தெல்லாமறிவன்யானீய தேதுமறியாயிதுவன்றோ
வில்லார்தோளாய்நமக்குள்ள வேறுபாடுவிளம்புங்கால். (சு)

வேறு

சாவாதுபிறவாது தனிமுதலாயிருந்தநா
னாவாவிவ்வுலகுபடு மழிதுயர்தீர்ப்பதற்காக
மேவாதுநின்றேயென் மாயையினான்மெய்யேபோ
லோவாதுபிறந்திடுவே னுகந்தோறுமுகந்தோறும். (எ)

மெய்வகையதிதுவென்ன வேண்டியார்வேண்டியன
எவ்வகையதெய்வமுமா யானேகாணளிப்பேனு
மிவ்வகையென்செயலதனை யறிந்தாரிவ்விடும்பையினின்
றுய்வகையநெறிபெற்றாங் குயர்ந்தாரையுரைப்பரிதால். (அ)

செயலாலுங்குணத்தாலுஞ் செலநாலுகுலமாக
வியலான்முண்படைத்தேனா னிப்பொழுதுங்காப்பேனான்
மயலாயவினைப்பயனின் மனம்வையேன்மற்றதனா
லயலாயேயிருக்குமெனக் கவையிவைவேறறிவாரியார். (க)

உய்யும்பரிசினுணர்ந்தவர்க ளுணர்ந்தவினை மேலொருப்படுநீ
செய்யுங்கருமஞ்செய்யாமை தீயகருமமென்றிவற்றின்

மெய்யும்பொய்யுமறிவரிமை யறியவேண்டும் பொருளுமிவை
யெய்யுஞ்சிலைக்கையுரவோயிங் கிவற்றின்செயலையியம்பக்கேள்.

ஓடுகின்றபுனலாற்றினோ டத்துடனேயோடுவான்
மாடுநின்றமரமோடத்தா னின்றாற்போல்வரச்செய்தே
நீடுநின்றமரங்களிவை நிற்குமியற்கைத்தன்மைத்திங்
கோடுகின்றேன்யானேயென்றுணர்வுமிக்கோனுணர்ந்தாற்போல்

செயன்மேனின் றவறிவிடையே செயலின்மையுமச்செயல்செய்யா
வியன்மேனின் றபுலன்களிலே யெல்லாவினையுமியல்வதுவு
மயன் மேலின்றியறிந்தான்யா ரவனேயெல்லாமறிந்தானு
முயன்மேனின்றயோகியுநல் வினைகளெல்லாமுறுவானும். (கஉ)

வேறு

ஆவதென்பது மாசையுமற்றன
மேவஞானவெந் தீயிடைவெந்தன
யாவர்தந்தொழி லவ்வகையோர்களே
சாவதும்பிறப்புந் தவிர்ந்தார்கடாம். (கஙு)

எண்ணுமின்றி யிகபரம்யானிவை
பண்ணுகின்றன னென்னுமிப்பான்மையோ
னுண்ணுமேல்வினை யுண்டெனவோர்கிலா
ன்ண்ணுகின்ற வினைநலிவுண்ணுமோ. (கச)

அடங்குகின்ற புலன்களோடாசைபோய்
மடங்குகின்ற மனத்தினனானவ
னுடம்பிதன்பொருட் டாலுளதாமெனத்
தொடங்குகின்ற வினைதொடக்குண்ணுமோ. (கரு)

பெற்றதேகொட மைந்துமுன்பேறிழ
வுற்றபோதிலொத் தொன்றுமொருவர்பாற்
செற்றமேது மிலாதவன்செய்வினை
குற்றமோவவற்றின்றிறங் கூறக்கேள். (கசு)

விட்டுமுற்றம் வினைகள்வினைப்பயத்
திட்டமற்றிறை தன்னிலெழுங்கருத்

தொட்டநின்றவன் யக்யப்பொருட்டுறப்
பட்டகன்மம் பலத்துடன்மாயுமால். (கஎ)

பிரமமானோர் பிரமநெருப்பிடைப்
பிரமமாகிய மந்திரந்தன்னினாற்
பிரமமாய சருவுடன்பெய்தபின்
பிரமமேயடைவாருளர் பின்னுங்கேள். (கஅ)

அறிவதாகிய வங்கியிலேகொள
வறிவையே சிலராகுதிபண்ணுவார்
செறிவதாஞ் சமத்தீயிடையேசில
ரெறிவதாயபுலன்களை யீவர்கள். (கக)

உந்தியப்பொறி யைந்தையுமொக்கவே
யிந்தியத்தழல்வா யிடுவார்சிலர்
நந்தியத்தொழில்யாவையு ஞானநெய்
சிந்தியோகவெந் தீயிடுவார்சிலர். (உ)

வேறு

தேடியபொருள்களாலுஞ் செயலுறுதவங்களாலு
நாடியயோகத்தாலு நவின்மறைஞானத்தாலுங்
கூடியபரிசால்வேள்வி குலாவுவரனேகரிங்குப்
பாடியவிவர்களன்றி யிவர்சிலர்பரிசுங்கேளாய். (உக)

வேறு

மிகமேனின்றபிராணனையங் கபானனிடையேபுகவிட்டங்
ககமேநின்றபானனையப்பிராண னிடையாகுதிபண்ணி
யிகமேயிரண்டுமியக்கமறவிருப்பார் சிலர்மற்றிவர்கண்டாய்
சகமேனின்றபிராணாயாமத் தலைநின்றவரேசாற்றுங்கால். (உஉ)

வேறு

இன்னவர்களியாவர்களு மியாகமறிவாரே
யன்னவர்களேயறனி றீமையினகன்றோர்
சொன்னபரிசாலிவை தொடங்கமுடியாதார்க்
கென்னபரிசாலுமிக மில்லைபரமுண்டோ. (உங)

வேறு

இப்படியுரைத்தவிந்த யாகங்களியாவுமுன்னஞ்
செப்பியபிரமத்தின்கட் செனித்தனசெய்யுங்காலை
யொப்பரிதாயபுத்தி கருமத்தினுளதாமுள்ளத்
தப்படியறிந்துநீயும் பாவத்தினகலநிற்பாய் (உச)

வேறு

தொன்மையாகமுன்சொன்ன துறைக்கெலா
நன்மையாமிகப் பாலதுஞானமே
பின்மையாலறுத் தாங்கதுபேணிடுந்
தன்மையாதெனிலாங்கதுஞ் சாற்றுவாம். (உரு)

வேறு

விழியாமெனவறிவாலறி வுறுவார்விழிவசமே
வழிபாடுசெய்தவர்சேவடி மலர்சூடிடவவரே
யொழியாதெவர்களுமியாவையுமொரு நீயெனதிடையென்
றழியாவகையது வாவதொரறிவேயருளுவரால். (உசு)

அதனால் வருபயன்யாதெனி லழிபாதமுதலாய்
விதநாடரும்வினையாழியி னிடையேவிழுகுறுவார்
திதனாகியவறிவாகிய சிதையமிதவையினா
லிதனாம்வகைகரைசேருவ ரெஙனேயெனிலதுகேள். (உஎ)

எறியாவெரிவருகா னிடையெரியாதனவெவைதா
னறியாவறிவுடையோர்களு மறிவாரதுவிதுபோற்
குறியால்வருகுணஞானமெ யனலேகொளவிடுமேற்
பொறியால்வருவினையானவைபொடியாமிதொர்பொருளே. (உஅ)

வேறு

தீதற்பாலாம்வினை புரிவோருஞ்சிலநாளி
லேதற்பாலாரறிவறிதக்கோ ரியாரென்னி
னோதற்பாலார்பாலுமிவ் வுண்மைப்பொருட்பாலுங்
காதற்பாலாரைம்புலன் வென்றோரிவர்கண்டாய். (உக)

சொல்லருஞானப்பொரு டெரியாரி சொன்னலு
மல்லவிதா மென்றை யுறுவாரங்கன்பில்லா
ரில்லவராவாரிகபர மில்லாரிவர்கண்டாய்
தொல்லறிவாலேயையுற வற்றோர் துறவுற்றோர்.

வேறு

அறியாமையிலேபிறந்துன்றன கத்தேவளர்ந்தவையுறவை
நெயாலுன்றன்ஞானமெனும் வாளால் வெட்டியறநீக்கிக்
குறியாலுன்றன்வினைவிளைத்துக் கொள்வாயென்றுகூறினா
னுறியார்வெண்ணைதொட்டுண் டிவ்வுலகமுண்டதிருவாயான்.

நான்காவது
சம்மிரதாவத்தியாயம் முற்றிற்று

ஐந்தாவது
ஞானகர்ம அத்தியாயம்

பூத்தருளியொருமலராற் புவனமவையீரேழுங்
காத்தருளிவிளையாடிக் கடைசாரங்கண்வளருந்
தீர்த்தன்மறைமுறைமொழிந்த திருவாக்குத்தெரியாதே
பார்த்தனவனெதிர்நின்று சிலவிங்ஙன் பகர்வுற்றான். (க)

வேறு

கருமநன்றெனவுமெதிர் கழறுகின்றனை துறவை
யருமருந்தெனமொழிதி யவையிரண்டினுமமல
வொருமையென்றுயரகல வுரைசெய்கென்றனன்விசய
னிருமையின்பரிசுமிது வெனவியம்பிடுமிறைவன். (உ)

துறவுநன்றருவினைசெய் தொழிலுநன்றவை துணியி
லறவுநன்றருவினைகள் விடலிலங்கவைமுயல்கை
பெறலிலின்பமுமிழவி லிடருமொன்றிலர்பெரிது
துறவுநின்றவர்பிறர்கடு யரினின்றிடுதொழிலர். (ங)

பெருமையொன்றியதுறவு கருமமென்றிருமையினு

மருமையொன்றினையடை ஞரவையிரண்டையுமுடைய
ரிருமையென்றறியுமவரிவை யறிந்திலரியல்பி
னொருமையென்றுணருமவரி வையுணர்ந்தவருணரில். (ச)

வினைமுயன்றிடவதனில் விளைதருதுறவதுகோ
டெனையடைந்திடுவரெவர் களுமிஙன்செயலைவிட
நினைவருந்தகையபொரு ணெறியறிந்திடுதலரி
தனையதன்றொழில்புரியு மவரடைந்திடுவரறி (ரு)

க□□தருங்குணமுமிகு களிதரும்புலனுமெனு
மிவைகடந்தவர்களெனை யறிவினின்றிசையுமவர்
நவைதருந்தொழில்செயினு நலிவதெங்கவரையவை
யவைகடந்தவர்கள்வினை யவைதுறந்தடைகுவதென். (சு)

வேறு.

காணுங்கேட்குமுறுமோக்குங் காலானடக்குங்கண்வளரும்,
பேணுந்துறக்குமூச்சுவிடும் பேசும்விழிக்குஞ்சிம்பிளிக்கும்,
பூணுமின்னம்பலவெனினும்புலன் சேர்பொறியின்புணர்ப்பென்றே,
தூணுங்கிரியுமெனவொன்றுந் துளங்கான்விளங்குந் துணிவுடையோன்.

யாரும்வினைகளென்பொருட்டா லியற்றிப்பயனையிகழ்வார்கள்
சேரும்வினைகளவற்றோடுஞ் சேராரெய்துந்திறமுரைக்கிற்
சாருமுடனேபிறந்தெனினுந் தண்டாமரையின் றகையிலையு
நீருமெனலாயிருப்பரதி நின்றோர்க்கொன்றுநிகழாதால். (அ)

வேறு

உடனாயபுலனாலு மனனாலுமுடம்பாலு
நடமாகுமெனமுயல்வார் நாடோறுமுயன்றாலும்
விடமாகுமவ்வினையே வீடாகும்வினைப்பயனைக்
கடனாகுமெனமுயல்வா ரதனாலேகட்டுண்பார். (க)

வேறு

அன்பவினையாகுபயன் விட்டமைதியாலே
யொன்பதுபொய்வாசலமை யூரதனினுள்ளே
யின்பவுருவாயினி திருப்பனியல்பாலே

முன்பயில்வதாம்வினை செயேன்முயல்வியேனால்.

இவ்வகையவாயசெயல் யாவுமில்பேகா
ணவ்வகையமாயையத னாலறிவுறாதே
செய்வகையன்யானெனது செய்கையிதுவென்றே
பொய்வகையினாலழிவ தேபுலனிலாதார். (கக)

வேறு

அறிவினாலறிகிலாத வையெலாமழியவே
செறிவினாரறிவுவா னிரவிபோறிகழுமா
னெறியினாலதனிலே நிலையுமாயதனிலோர்
பிறிதிலாவகையினார் பிறவியானதுவிலார். (கஉ)

வேறு

நன்றேஞானவருமறையோ னன்னாயந்நாயிறைச்சிதனைத்
தின்றேயுழலுமவன்யானை யாவென்றிந்தத்திறத்தெல்லா
மன்றேயென்னாதாமென்னா தறிவாய்நின்றவெனையெங்கு
மொன்றேயாகக்காண் பானிவ்வுடம் போடிருந்தேயுடம்பறுப்பான்

இகமேநிகழும்புலன்விளைந்த வின்பமெல்லாமறவிகந்துள்
ளகமேவிளையும்பேரின்ப மடைந்தார்க்கென்றுமழியாதாற்
புகமேய்கின்றபுலன்பொறிகள் புணர்ந்தவின்பம் போமென்றுந்
தகமேலிடராமெனவுமவை தக்கோரென்றுஞ்சாராரால். (கச)

வேறு

உடம்புடனேயுள னாகியிருந்தே
விடம்புரைகாம வெகுளியின்வேகாச
சடம்பொறையாமை தவிர்த்தவனேநல்
லிடம்புகுஞானியு மின்புறுவானும் (கரு)

மெய்யறிவேவிளை வின்பமதாகவு
மெய்யறிவேவிளை யாடிடமாகவு
மெய்யறிவேயொளி யாகவுமேயோர்
மெய்யறிவெபெறு மின்பம்விடாதார். (கசு)

காவல்செய்தைந்து புலன்கணிரண்டு'
மேவவிரும்புரு வத்திடைவிட்டிட்
டாவகைநின்றவ பானபிராண
னேவலினின்றியியக்கமறுத்தே (கஎ)

அஞ்சுபொறித்திற னாசையடக்கா
நெஞ்சுபயத்தொடு கோபமுநீக்கா
வெஞ்சுதிறத்தலில் யோகிகள்காணு
முஞ்சுபிறப்பிடர் யாவுமுதிர்ப்பார். (கஅ)

வேறு

சாதிபுரியுந்தொழில்களுக்குந் தக்கோர்செய்யுந்தவங்களுக்குந்
தீதிலுலகமேழினுக்குஞ் சேருமிடமாயுள்ளவெனை
யொதிமுடியும்பரிசே மெய்யுணர்ந்தார்பிறவாரெனவுரைத்தா
னாதிமுடிவொன்றியே யடையத்தானேயாய்நின்றான். (கக)

ஐந்தாவது
ஞானகர்மவத்தியாயம் - முற்றிற்று

ஆறாவது
யோக அத்தியாயம்

யோகமனத்தவர் யோகமதற்கே
யேகமுதற்பொறு ளாகியிருந்தே
நாகபணத்திடை யேநடமாடு
மேகமவற்கிவை மீளவிரித்தான். (க)

செய்தவினைப்பயன் விட்டிவைதீரா
தெய்தவியற்றி யிருப்பவனேகா
ணுய்யநிலத்துநல் யோகியுஞானியும்
வெய்யதழற்பொலி வேள்விசெய்வாரில். (உ)

மேவினயாவையும் வீடுதலில்லார்
யாவர்களேனுநல் யோகிகளாகா
ராவர்களாகில வாவறலேகா
ணோவலிலாதநல் யோகமுமையா. (ங)

உய்வகையோக மொருப்படுவார்க்கது
கைவருமாசெயல் காரணமேகாண்
மெய்வகையோகம் விளைந்தபின்மெய்யே
செய்வனவானவை தீமையவேயாம். (ச)

புன்மையவாய பொறித்திறனோடும்
பன்மையமான வினைப்பயனோடு
மன்மையனான வனப்பொழுதையா
தன்மையில்யோக மதிற்றலைநின்றான். (ரு)

தானலதியாவர்தன் மென்மைசெய்தக்கார்
தானலதியாவர்தன் கீழ்மைசமைப்பார்
தானலதியாவர்தன் மெய்ப்பகையாவார்
தானலதியாவர் தனக்குறவாவார். (சு)

இறவாவகைதன்னுள்ளத்தை யடக்குமவனே தனக்கென்று,
முறவாயுள்ளானல்லாதார் தமக்கேபகையாயொழுகுவார், துறவாதொழுகுந்
துவங்க டுறந்தொன்றினையே தொடர்ந்தவர்பான்,
மறவாதெழுந்தமெய்யறிவும் மாயைமறைக்கமறையாதால்.

பாடும்பனுவல்பலவோதி யவற்றாலறியும்பயனுணர்ந்து
நீடும்புலன்களவைவென்நிலையிற்கலக்கற்கரியானா [யிங்
யோடும்பொன்னுமொருபொருள்போ லொக்கப்பார்க்கு மவனே
காடும்பெரியமாயக்கூத் தாடாததுகண்டமர்ந்திருப்பான். (அ)

கைம்மாறில்லாதனசெய்வான் காதற்றோழன்கடும்பகைஞ [தா
விம்மாதெவர்க்குமொத்திருப்பான் வேண்டப்படுவான் வேண்டா
னம்மாமறைநூனெறிபுரிவா னாகாதனவாக்கிடுவானென்
றிம்மாநுடவரனைவருக்கு மொப்பான்யோகி யெனப்படுவான் (க)

தலையாமிந்தயொகத்தைத்தலைநின் றொழுகுந்தன்மைகே
ளுலையாவாசையறமாற்றி யொன்றுந்தனக்கென்றொழுகாதே
மலையார்முழைஞ்சேமுதலாக யோகங்களுக்குவகுத்துரைத்த
நிலையாவையினுமொன்றினில்வந்தியா துநலியாவிடத்ததிலே.

ஒக்கும்வகையாற்குசைபரப் பியதன்மேலுழையின்றோல்படுத்துத்
தக்கதுகிலையதன்மேலேவிரித்துத் தானங்கதிலிருந்து
மிக்கமனனையறவொருக்கி வேறுசெய்யும்வினைகளுடன்

றொக்கபுலன்களவைடக்கியுணர்வு தூய்தாவதன்பொருட்டால்

தலையுங்கழுத்துமுடம்புமிவை செவ்வேதளராதேயிருக்கு
நிலையிலிருந்துகண்களைத்தன் மூக்கினுதிமேலேநிறுத்தி
யலையுங்கடல்போற்காமமு மெய்ப்பயமுந்தன்னைவிட்டகல
வுலையுமனமுள்ளடங்கவெனையுணர்ந்தேயிருக்குமது யோகம் (கஉ)

எண்டிகழுமியோகத்தை ப்பரிசேயெப்பொழுதுங்
கொண்டுபயில்வார்கடைக்கா லென்னையேகூடுவரா
லுண்டியினின்மிகுவாருண் டுறப்பார்மிக்குறங்கிடுவார்
கண்டுயிலையறத்துறப்பா ரவர்க்கிதுகைவாராதால். (கங)

வேறு

துயிலுமுணவுஞ்செய்தொழிலு மிகாமேகுறைந்துதோன்றாமே
பயிலுமவனேயோகத்தைத் தன்பாற்படுக்கும்பான்மையா
னயிலும்பொறிவிட்டவ்வறிவு தன்பாலடங்குமப்பொழுது
குயிலுமியோகந்தலைநின்றா னென்றாங்கவனைக்கூறலாம். (கச)

இப்பரிசுபயில்கின் றயோகி காலிலாவிடத்து
மெய்ப்பரிசுநடுங்காத விளக்குப்போல்விளங்குமா
லெப்பொழுதங்கவனுணர்வில் வுண்மையிலேசென்றிசையு
மப்பொழுதுபரமானந்தத்தினையு மடையுமால். (கரு)

வேறு

யாதொன்றிந்தப்புலனறியா வளவிலின்பமாயிருக்கு
மியாதொன்றினைச்சென்றடைந்தோர்கள் பின்னையதனிலிரண்டா
ரியாதொன்றினைப்பெற்றவ ரிதனின்மிக்கதொப்ப துண்டென்னா
ரியாதொன்றிந்வறிவுக்கே யறிவாய்நிற்குமதினின்றோர். (கசு)

வேறு

வஞ்சர்வேல்கொடுமார்பி னெறியினு
மெஞ்சவேதழன்மூடி யெரியினு
நஞ்சினாரழனாக நலியினு
மஞ்சிடாரது வானந்தமாவதே. (கஎ)

போகமாயபுலன்களைப் போக்கறுத்
தாகமாமெய் யறிவிடையேயந்த
வேகமாயமனத்தினை மெல்லவே
யேகமாக விருத்திகலாதுநீ. (கஅ)

வாங்கியைம்பொறி நின்றமனத்தினை
நீங்கிடாவகை நின்னுளிருத்தியுந்
தீங்கியாவையுஞ் சிந்தைசெயாமையும்
பாங்கியாதது பயில்வாயரோ. (கக)

தேறுநெஞ்சினனாய்த் தன்செயலலால்
வேறுகண்டறியா மெய்யறிவினா
லூறிலிந்தவுடம்புடன் வேறுபெற்
றேநிநின்றவனே யின்பமெய்துவான்.

வேறு

இழியாதிந்தயோகத்தையென்றுந் தலைநின்றவனென்று
மழியாவின்பத்தினையின் பத்தாலேயடையுமதுநிற்க
வொழியாவெல்லாவுயிர்களுந் தன்னுள்ளேகாணுமவற்றுள்ளே
கழியாதெங்குந்தானின்றபரி சுந்தெரியக்காணுமால். (உக)

யாவனொருவனென்னையெல்லா வுயிர்களிடையுமென்னிடையே
மேவவெல்லாவுயிர்களையும் வேறாகாதேமெய்காண்பான்
றேவர்பகைமுன்செகுத்தோனே யவனியாதெனினுஞ்செய்திடினு
மாவவவனாகின்றேன் யானதுநீயேதுமையுறேல். (உஉ)

இடரானதுதானின்பந்தா னியாரேனுக்குமாயிடுகப்
படராநின்றவதுதானுமுறு வானியோகியெனப்படுவான்
சுடராய்நின்றவடிவேலாய் துணிநீயென்று துழாயலங்க
லடராநின்றநெடுமுடியோனருளிச்செய்யவவனுரைப்பான். (உங)

எல்லாவுயிருமொன்றாகப் பார்ப்பதியோகமெனவுரைத்தாய்
மல்லார்தோளாயிதற்குநிலை காணேன்மனமாகின்றவிது
நில்லாவியற்கைத்தாய்ப்புலனைக் கலக்குமதனைநிலைநிறுத்த
லொல்லாதெனவுங்காற்றடக்கற் கொக்குமெனவுமுணர்கின்றேன்

வேறு

இவ்வகைவிசயன்கூற மாயவனியம்புகின்றா
னைவகைப்புலனுநெஞ்சு மடக்குகையரிதானாலு
முய்வகையோகமியாவு முயர்ச்சியினாலுமொவ்வா
வைவகைப்புலன்செயின்ப மனைத்தையும்வெறுத்தலானும் (உரு)

வேறு

வெய்யநெஞ்சமடங்கிடும் வேறிதற்
கையமில்லையென் றேயறியாதலாற்
பையவேகரணம் பதினான்கையுங்
கைகடந்தவர் யோகமுங் கைகண்டார். (உசு)

என்று கூற விசயனியம்புவா
னின்றுயோகத்திலே நெடுநாளெலாம்
பொன்றுங்காலத்தயர்த்துயிர் போயினாற்
சென்றுநற்கதி யேயன்று சேருமா. (உஎ)

யோகமேவவினைக ளொருவினான்
மோகமேவலின் யோகமுடிந்தில
னேகமேயிருபாலும் விடாநிற்க
மேகமேயென வீந்துகழியுமோ. (உஅ)

மையலிதுவென் மனத்தினின்மற்றிந்த
வையமறுக்கவல்லாரில்லை நீயன்றி
யுய்யவிதனையுரையென யோகத்தின்
மெய்யனிதனைவிரிய வுரைக்கின்றான். (உக)

பொய்மையடையாப் புலனுடைமாந்தர்க
ளிம்மையிடையு மறுமையுலகத்தும்
வெம்மையடைகிலர் மெய்மைவிடாரென்றுஞ்
செம்மைதெளியின்னஞ் செப்புதுங்கேளாய்.

யோகமுடியா திடையேபிறந்தவன்
யாகவிளைபலசெய் தாங்கிசைந்திடுஞ்
சோகமினாடெய்தத் துன்பந்தொடராதே
போகநுகர்ந்து பல்காலங்கள் போயபின்.

சிறந்தவரசர் திருக்குலத்தாத
லறந்தருயோகி கடங்குலத்தாதல்
பிறந்துபெறுவதெல்லா மெய்திப்பின்னு
மறந்தவியோக மகிழ்வுடனெய்தும்.

கொண்டுபயிலுங் குணமிலனாகினு
முண்டுதெளிவென் றுணர்ந்தவியோகந்தான்
பண்டுபயின்ற பயிற்சியினார்களைத்
தண்டுதலின்றிமும் றானேதலைப்படும்.

அனையவியோகத்தை யாற்றுவனென்று
நினையுமவனு நெறிபிறழாமல்
வினைகள்பலசெய்து வேள்விமுடித்தா
னணையுங்கதிமேற் கதியையவன் பெறும்.

நீடுமனநிலை நின்றிலனாகினு
மோடும்வகையால் விடாதேயுழன்றவன்
பாடும்பவங்கள் பலகடந்தாயினும்
வீடும்பெறுமின்னம் வேறுஞ்சிலகேளாய்.

எல்லாத்தவமு மியற்றிநின்றோனினு
மெல்லாக்கலைகளுங் கற்றுணர்ந்தோனினுஞ்
செல்லாக்கருமமெல் லாஞ்செய்தவனினு
நல்லான்வலியோகி நீயிதுநண்ணுவாய்.

வேறு

இருவகையவினையறுக்கு மியோகிகளெல்லார்களினு
மருவரியமனத்தினையு மன்பையுமென்பால்வைக்கு
மொருவனுமேயானுவக்கப் படுகின்றேனெனவுரைத்தா
னருவெனவன்றுருவெனமுன் பாராலுமறிவரியான்.

ஆறாவது
யோகவத்தியாயம் - முற்றிற்று
ஆகத்திருவிருத்தம்

ஏழாவது
மாயாரூப அத்தியாயம்

உய்யவன்பினொடுமென்னையே யடையுமியோகமே பயிலுமி
யோகிதா, னையமின்றியெனையேயடைந்திடுமதைய நீயுமறிவாயென,
வையமுண்டுமறைநீர்மையுண்டிடையர் மாதருண்டிடமலர்ந்திடுஞ்,
செய்யதண்பவளவாய்திறந்து திருமாதுகேள்வனிவைசெ ப்புவான்
(க)

மாயுமாயைமறையாத நெஞ்சினிடை மற்றெனுண்மையினை
வாய்மையா, லேயுமாறு றவறிந்துளோர்களறியாத தொன்றுமினை
யென்னினு, மாயுமானுடரநேகர்பாலொருவ னென்னையாயுமனம்
வைத்துளா, னாயுமானுடரனேகர்பா லொருவனேயறிந்துமுடிவா னையா.
(உ)

மண்ணுநீருமெரி தீயும்வாயுமவ் வானினோடுமனபுந்தியு,
மெண்ணுநீர்மைகளிலியானெனும் பதமுமெண்ணுமெட்டுமிவைய ன்றியே,
பண்ணுநீர்மைகளின் மேலதாயுலகிலியாவையுங்கொடுப ரித்துடற்,
கண்ணுநீடுயிருமாகியென்னுடைய மாயைநிற்பதுகை வேலினோய்.

கண்ணினாற்றெரியலுற்றுணர்ந்தவிவ் விரண்டினாலும்வருகாரியாம்,
பண்ணிநிற்பனநடப்பவென்ற பொருளியாவுமற்றவிருபான் மையே,
நண்ணிநிற்பதுலகாதலாலுலகி னாசவுற்பவமுநானலா,
தெண்ணின்மற்றறிவதில்லை யெப்பொருளு மென்னிலன்னியமதில்லையால்.
(ச)

வேதமாகிநிகழ்யானலாதுலகி லென்னில்வேறெனவிளங்கிடும்,
பூதமானவைபொறுக்க வேறு பொயை□ளரில்லையெதுபோலெனி,
லோதுமாமணியநேகமூடுருவு கோவைநூலிலொருபான்மை போற்,
பேதமானபொருடோறுநான்மருவி நின்றவாறுநனிபேசு வாம் (ரு)

வேறு

திரியுமிருகதிரினிடைத் திகழொளிநான்றிருமறையி
னரியமுதலெழுத்துநானாடவர் பாலாண்மையுநான்
விரிபுனலிற்சுவையுநான் மேதினியில்வாசமும்நா
னெரியில்வருவெம்மையுநா னாகாசத்தெழுமொலிநான். (சு)

ஆனறவறிவுடையோர் பாலறிவு நானடங்கினர்பால்
வான்றவநான் வளர்நன்மை பூண்டார்பால்வண்புகழ்நான்

றோன்றன்மிகுதிறலோர்பாற்காம முறாத்தொல்வலிநா
னூன்றுபொருளனைத்தினுக்கு முயிராகியுள்ளேனான். (எ)

மூன்றுகுணவகையாகி முடிகின்றபொருண்முழுதுந்
தோன்றுவதுமென்னிடையே யெனைத்தொடர்ந்தேநிற்பதுவு
மான்றவமற்றவற்றினிடையான் றோன்றேனவற்றினுக்குச்
சான்றெனநிற்குவனல்லா லவைசார்ந்துவாழேனான். (அ)

மைக்குணங்களெனுமிவற்றின் மயமாயம்மயத்துவமா
யிக்குணங்கண்மூன்றாலு மயக்கப்பட்டறிவிழந்து
தொக்கிணங்குகின்றவுயி ரிவையெல்லாஞ்சுடர்வோலோ
யக்குணங்கள் கடந்தவெனை யறியுமோவறியாவால். (க)

இவ்வகையகுணமூன்றி னியற்கைத்தாயாராலுஞ்
செய்வகையதல்லாவென் மாயையினாற்றிகைப்பொழிந்திங்
குய்வகையதரிதெவர்க்கு மென்னையேயெப்பொழுது
மெய்வகையோடடைகின்ற மனமிலரேல்வேல்வேந்தே.

ஊழாலேவருமிந்த மாயையினாலேயுள்லம்
பாழாகவறிவிங்கே பறியுண்டுநெறிநின்றோர்
வீழாததீவினையே வினையாகவிளைக்கின்றார்
கீழானோரெனையடையா ரடைவாருஞ்சிலருளர்கேள். (கக)

வேறு

செல்வம்விரும்பினர் செல்லலடைந்தோ
ரல்லல்கெடுக்கெனை யன்புசெய்வோர்க
ணல்லதறிந்தமெய்ஞ் ஞானியிந்நால்வரும்
வல்லதிலென்னை வணங்குதவத்தோர். (கஉ)

இன்னவர்தங்களி லென்னொடும்வேறா
யுன்னலிலாமை யின்ஞானியுயர்ந்தோ
னன்னவனல்ல னெனக்கவனுக்கே
நன்னலம்வைப்பது நானுநலத்தோய்.

ஓதருஞானியென்னுண்மையினுள்ளே
யேதலினாலவ னானெனவேயா
மாதலினாலவ னேசிலவாய

காதலினாய பவங்களினெய்தான்.

விரியவுணர்ந்த விழுப்பொருளெல்லா
முரியவெனன்றி யிலாதவொழுக்கந்
தெரியவறிந்தெனை யேசெறிகிற்பா
னரியனவன்பெறுதற் கயில்வேலோய். (கரு)

மற்றவருந்தம் மனங்களில்வைத்த
பற்றதிலேபறியுண் டறிவெல்லா
முற்றவைதந்திடு தெய்வவொழுக்கா
னற்றவநின்றவை நண்ணுவர்வேலோய். (கசு)

யாவனொருத்த னியாதொருதெய்வ
மேவவருச்சனையன் பின்விளைப்பா
னாவசலிப்பறு மன்பவனுக்கே
யாவனமுற் றதளித்திடுவேனான். (கள)

அளித்தவவன்பொடு மத்தெய்வநாளுங்
களித்துவணங்கினர் காதலவெல்லாம்
வெளிப்படமுற்று மளித்திடுவேனா
னொளிப்பரிதா முருமஞ்சவுடன்றோய். (கஅ)

சிந்தையினித்தெய்வ மெய்த்தெய்வமென்றே
முந்தவருச்சனைசெய்து முடிக்கு
மந்தமனத்தர்பெறும் பயன்வாணா
ளந்தமுடைந்த தனித்தமுமையா. (கக)யு

வேறு

தானந்தமிலியுவமைதர நின்றுதாவரிய
வானந்தவுருவமென வெனையொன்றுமறிவதிலர்
கோனந்தமகனரசர் குலமைந்தனிவனுமெழி
லானந்தமிலியொருவனிவனென் பாறிவிலிகள்.

மருவுற்றபிரகிருதியதிலுற்று மறைவனெழி
லொருவர்க்குமறியும்வகை வெளிநிற்பதிலையுலகில்
வெருவுற்றபெருமயலின் மனமுற்று விழிமறைய
வருவுற்றவெனையுலக மறிகிற்பதிலையடைய. (உக)

வேறு

போனவையினிமேற் புகுதநின்றன விப்பொழுதுபோகின்ற னவனைத்தும், யானறிந்திருப்பனியாவையு முலகிலென்னைமற்றி யாவருமறியார், மானவெஞ்சிலையாய் வேண்டல் வேண்டாமைதன் னிலேவருகுணமயக்காற், றானமைந்துருவாய்ச்சனித்திடும்பொழுதே தந்தமெய்யறிவுசார்ந்திடலால். (உஉ)

வியக்கமேன்முயன் றநல்வினைமாந்தர் விரும்பலராகிமுன்செய்த, பயக்கமேவிதீவினை யெலாமறவே பற்றறப்பறிந்துமுன்போ னாற், றுயக்கமேபுரியுஞ்சோகமேமுதலாந் துவந் துவங்குணங்களிற்றொடர்ந்த, மயக்கமேவலராயொழுக்கமே நிலைநின் றென்னையே மனத்திடைவைப்பார்.

எறிவரும்பிணிமூப்பிறப்பொடுபிறப்பென்றிவை கெடுத்திடல் பொருட்டாகக், குறிவரும்பரிசுநினைத்துமற்றெயே கூடுதன் மேவிநின்றவர்க, ளறிவரும்பிரமந்தன்னையுமதனை யறியுமெய்யறி வையுமறிவி, னெறிவருங்கருமமனைத்தையு மறிவரறிந்தபின்னிகழ் வதுங்கேளாய். (உச)

வேறு

தேடும்பழையவதிபூதமதி தெய்வத்தோடதியெச்சங்
கூடும்பரிசுநின்றவெனை யறிவாரிந்தப்புழுக்கூடு
வீடும்பொழுதுமெனைமெய்யே யறிவாரென்றானியாம்வெவ்வே
றாடும்பழையமாயக் கூத்தாட்டுகின்றவம்மாயன். (உரு)

ஏழாவது
மாயாரூபவத்தியாயம் - முற்றிற்று

எட்டாவது
எழுவகைவினாவுரைத்த அத்தியாயம்

அடையஞாலத்தை யார்த்ததிலார்ப்புணா
திடையர்தாம்பிடை யார்ப்பவிருப்பவ
னுடையனாகமுன் போதினவேகொடவ்
விடையனானவன் மீளவியம்புவான். (க)

வேறு

ஆயபிரமத்தோடத்தி யாத்மமமைகரும
மேயவதிபூதமதி தெய்வமதியெச்சங்
காயமதிலுள்ளபரி சுங்கெழுமுகாயம்
வீயலுறு போழ்திலுனை மெய்தெளியுமாறும். (உ)

விரியவுரைசெய்தருள வேண்டுமெனமீண்டவ்
வரியரவிலேதுயிலு மாயவனுரைப்பா
னரியதழியாமையத னைத்தினுமுரைக்கிற்
பெரியதுமொழிந்த பிரமம்பிறவையுங்கேள்.

வேறு

அந்தக்கரணங்களினின்ற வறிவத்தியாத்மமாவதுதா
னிந்தப்பிறவிதனையாக்கும் யாகங்கருமமென்பதுதா
னந்தற்கமைந்தவுடம்பதனை நானென்கின்றததிபூதம்
பந்தப்படுமிவ்வுடற்கமைந்த புருடன்றெய்வமெனப்படுவான். (ச)

எஞ்சுதலையிலதியெச்ச மாகின்றேனானிறக்குங்கா
னெஞ்சுகவருநெறிகளெலா மடைத்துநினையப்படுவதுநா
னஞ்சுபுலனும்பொறியைந் துமடக்கிய றிவென்பாலதாய்த்
துஞ்சுமவர்களெனையடைவ ரெவ்வாறென்னிற்சொல்லக்கேன்.

இந்தவுடலம்விடும்பொழுதுயாவனி யாதொன்றினை நினைந்தா
னந்தவள வேயந்தப்பாவனையா லதனையடையுமா
லெந்தனியல் பேயெப்பொழுது மிதயத்திடைகொண்டென்பாலா
சிந்தையொடும்வாமளர்தொடங்கி லதனாலெனையேசெருதியால்.

நல்லகருமயோகத்தும்ஞான யோகமதுதனிலுஞ்
செல்லுமனனைமிகச்செலுத்திப் பிறிதொன்றினையுஞ்சேராதார்
சொல்லவரியகதிரவன்மண்டலம்போற் றோன்றுட்தொல்லோனை
யல்லதடையாரவனியற்கை யடையும்பரிசையறையக்கேள். (எ)

எல்லாப்பொருளுமறிவானையெல் லாப்பொருட்கும்பழையானை
யெல்லாரையுந்தன்னிலைநிறுத்து வானையிரம்பச்சிறியானை
யெல்லாப்பயனுமீவானை யார்க்குநினைதற்கரியானை
யெல்லாவிடத்துமிருடீர்த்த விளவெங்கதிர்போலெழுவானை. (அ)

மருவற்குரியவன்புடையார் மயங்காயோகமனத்தாலே
புருவத்திடையே தன்னுடைய புரைதீருயிரைப்புகநிறுத்தி
புருவத்தினைவிட்டிடிலிந்த யோகத்தாலேயவனோடும் [லோய்.
பொருவப்படுமப்பொருண் மேலே யின்னம்புகல்வன்பொருவே

வேறு

யாதொன்றைமறைதெரிந்தோ ரழியாதென்றெடுத்துரைப்பர்
யாதொன்றையவாவறுத்ஹ யோகிகடாமெய்திடுவர்
யாதொன்றையுறநினைந்தோர் காமமுதலியவிழப்ப
ரியாதொன்றப்பரம்பொருளா மதனைச்சுருங்கவியம்புவன்கேள்.

வேறு

அஞ்சுபுலன்வழியவை யடைத்தயலுறாதே
நெஞ்சுதனையிதய கமலத்திடைநிறுத்தி
யெஞ்சுதலிலுயிர்வளியை யுச்சியினிலேற்றி
யுஞ்சுபுகுநெறியென வியோகுடனிருந்தே. (கக)

ஓதலினியற்கையினொடோமெனு மெழுத்தை
வாய்தனிலுரைக்க மனமான துதனித்தே
மேதகுமெனைத்தெளியவா விதனைவிட்டோர்
வீதலினியற்கையெனையே யடைவர்மிக்கோய். (கஉ)

இப்பரிசினாண்டொரறு திங்களளவென்னா
தெப்பொழுதுமென்றனியல்பே நினையலுற்றார்
கைப்படுவனியானெனியல் கைப்படவிருந்தோர்
பொய்ப்பிறவியானது மறித்தடைதல்பூணார்.

வேறு

செய்யாமுன்சார்ந்தவினை தீர்ந்தபோதே திசைமுகனாடணைந்
தோருந்திரியமீள்வர், மெய்யாகவெனையடையு மவரேகண்டாய்
மீளாதநெறி யடைந்தார்வேறுகூறி, லையாகேள்சதுர்யுகமீரைஞ்
ஞுறுமொருபகலா மாண்டொரு நூறயற்குமுள்ள, தெய்யாதங்க
வனுக்கோர்பகலிற்றோன்றி யிராவிறக்குந் தன்மைத்தாமியோனி யெல்லாம்.

வேறு

நெறியில்வருவியத்தமோடவ்வியத்தங் கூடாதநிலைமையென்றும்,
பொறியழியுமாக்கைதனி லழியாதபுலமென்றும்புதிதன்றென்று,
மறிவரியநெறியென்றுமழியாதபொருளென்று மடைந்தோர்பின்னைப்,
பிறிவரியநெறியென்றும் பெரியோர்கள்பேசுவதென் பெற்றிகண்டாய். (கரு)

எப்பொருளுமியாதொருவனுள்ளடங்கிற் றெங்குமாய்நிற்கின்றான்யா,
ரப்பரமபரம்பொருளாயுள்ளவெனை யன்பாலேயடைவதையா,
வெப்பரிசுவருங்காலத்திறந்தார்கள் பிறவாதார்பிறப்ப ரென்னி,
லப்பரிசுவருங்காலத்தினையறிய வுரைக்கின்றேனதனைக் கேட்பாய். (கசு)

அங்கியொளிபகல்வெண்மையாங்காலதேவதைகளவர்களோ டுந்,
தங்குமறு திங்களிடையுத்தராயணஞ் சார்வார்மறுத்துஞ்சாரார்,
கங்குல்புகைகறுப்பென்னுங்கால தேவதை யடைந்துபிறங்குங் கண்டா,
யெங்குமறுதிங்களிடைதக்கணாயனத் திறந்தயோகியெ ன்பான். (கஎ)

வேறு

ஏதமானதின்றியிவ் விரண்டுமாயுமியோகிதான்
வேதமோதிவேள்விதான மெய்த்தவங்கள்செய் துளா
ரேதுவாயநற்பதங்களெய்தி வீடுமெய்துவா
னாதலாலவ்வியேகமே செய்யென்றுமாயனோதினான். (கஅ)

எட்டாவது
எழுவகைவினாவுரைத்தவத்தியாயம் - முற்றிற்று

ஒன்பதாவது
மாயாவிகார அத்தியாயம்

ஈர்வன்றுயர் களையும்பத மீதன்றுகொ லெனவே
யார்வஞ்செயும்விசயன் கொளுமாசங்கையையறியாக்
கார்வந்தெனவனன்புறு களிகொண்டெழுவெளியே
தேர்வெண்பரிகுசைகொண்டெழு பாகன்றிருகொழிவான். (க)

அறையும்பொருள்களின்முன்பனு பவமொன்றியவதனை
மறையும்பொருள்களின்முன்பற மறையும் பொருளினைமே
லிறையுந்துயரதுவின்றிமு னியைகின்றதையிசைவோ

டுறையுந்துகளறநின்றதை மொழிகின்றனனுணர்நீ. (உ)

அழிவொன்றிலதறனொன்றிய தரிதன்றியததன்மேல்
வழிவந்தமெய்யறிவன்பில ரெனையெங்கணுமருவா
திழிதந்திடுசெனனங்கொடு மரணங்கொடுமிங்னே
யுழிதந்திகபரமொன்றிய்ய வுருவங்களிலுழல்வார்.

வேறு

யாருமறியப்படாமையே யெனக்குவடிவாயுடையநா
னாருமுலகங்களையடையப் பரப்பிநிற்பனாதலினாற்
சாருமூலகிற்சராசரங்க ளெனையேயவற்றையான்சாரேன்
சேரும்பரிசுநின்றாற்போற் றெளியாதார்க்குத்திகழுமால். (ச)

வேறு

முன்னேயொன்றுங்கலவாதி யானிற்பன்முழுதுமாய்நின்ற
வந்நேர்மையினாலுலகமென்னோ டங்கங்கலவாதாதலினா
லென்னேயென்றனியற்கையினைப் பாராயிந்தச்சகமெல்லா
மன்னேயென்றன்மாயை பெருமாங்காரமுனாய்த்தருவன்காண்.

வேறு

என்னுருவிற்புணராதே யென்னைவிடத்தோன்றாதே
மன்னுயிர்களெனையென்றுஞ் சார்ந்துவரும்வகைகேட்கி
லுன்னுமிடமெங்குநிறைந் தொளிர்கின்றவானெங்குந்
துன்னியற்கைசெறிகாற்றின் றோற்றம்போற்சுடர் வேலாய். (சு)

ஈண்டுபொருளிவையனைத்து மிறக்குங்காலென்னிடையே
மாண்டுபுகும்பிறக்குநாண் மற்றவைதான்வரன்முறையே
மீண்டுபுறப்படுமெல்லா மாதலினான்மெய்பார்க்கி
லியாண்டுமுயிர்படைத்துக்காத் தழிக்கின்றேனியானேகாண். (எ)

வேறு

விலங்கலனை யாய்பலங்களுடன் வேண்டல் வேண்டாமையை விட்டுச் சலங்கொள்வினைகளைவைசெய்வ னதனாலென்னையவைசாரா, வுலண்டுவாயானூற்றந்த நூலாற்கட்டுண்பது போலப்,

பலங்கணினைவாரதனாலே கட்டுண்டாங்கேபட்டுழப்பார்.
(அ)

வேறு

ஊர்வனநிற்பனவாக வுலகவையுண்டாக்குமெனை
யோ்வுபெறவறியாதார் மகனென்றேயிகழ்ந்திடுவர்
வேரெனநெஞ்சத்தாசை வினைகளைமிடையச்செய்வா
ராரெனில்வர்கடாமு மரக்கரோடசுரராவார். (க)

அறிவினாலென்னையாக வறிந்துகொண்டமைதியாலே
பொறிவழியடைத்தெப்போது மென்னையேபோற்றிசெய்து
நெறியினால்வழுத்திவாயா லென்னையேநினைந்துநெஞ்சாற்
செறிதருமிவர்கள்கண்டாய் தேவரிற்றெரியப்பட்டார்.

வேறு

காலத்தாலும்பொருளிடத்துங் கணித்தற்கரிதாகியவென்னை
ஞாலத்தார்கள்புகழ்வரிய ஞானயாகங்களினாலே
கோலத்தால்வேறாகவுமெய்க் குறியாலொன்றாகவுங்கொண்டு
சாலத்தாழ்வாரவருடைய தன்மையினைநான்சாற்றக்கேள். (கக)

வேறு

வேதமொழிவேள்விமிகு வேள்விபிதிரர்க்கே
யீதலுறும்வேள்வியெரி நெய்சருவிவற்றாற்
காதலுறுவோர்கள்புரி காரியமிதெல்லா
நாதமுதலாயபொரு ளாயவையுநானே. (கஉ)

ஆயிலுலகங்களை யளித்தொளிவளர்க்குந்
தாயினொடுதந்தையவர் தந்தைதலைகண்ணான்
போயினவினைப்பய னளித்தல்புரிவேனா
னேயுமறைமூன்றினுட னோமெனுமெழுத்தியான்.

வேறு

எல்லார்க்குங்கதியுநா னிருவினைப்பாரகனுநா
னெல்லார்க்குந்தலைவனா னெப்பொருட்குஞ்சான் றுநா

னெல்லார்க்குமுறைவிடநா னியார்க்குமிடர்தீர்ப்பேனா
நெல்லார்க்குநல்லேனா னெப்பொருட்கும்வித்துநான். (கச)

வேறு

தாங்கியநீரையெல்லா மிரவியாய்த்தலத்துநின்று
வாங்குகின்றேனுமீள மழைகளாய்க்கொடுக்கின்றேனு
மீங்குமெய்யுணரிலியானே யாதலாலியாதொன்றேனு
மாங்கருச்சனை செய்கின்றா ரென்னை யேயருச்சிக்கின்றார். (கரு)

ஞானமாயொன்றாய்நின்ற வென்னையேநானாவாகப்
போனதீவினையின்மாந்தர் வேள்வியாற்பூசித்தத்தால்
வானமாமுலகமேறிவாழ்ந்து மண்ணிடையேவீழ்ந்திட்
டீனமாமாசையாலே யிறப்பதுபிறப்பதாவார். (கசு)

மின்னையேய்வேலோயென்னை மேவுவார்வேண்டிற்றெல்லாம்
பின்னையேயென்னாதன்றே யளித்தவைகாப்பேன்வானோர்
மன்னையேமுதலாந்தெய்வம் வணங்குகின்றாருமற்றென
றன்னையேவணங்குகின்றார் தாமறியாததேகாண். (கஎ)

தேவரையடைந்தோர்தேவ ராவர்கள்பிதிர்கடம்மை
மேவவேயடைந்தோரந்தப் பிதிர்களாய்விளங்காநிற்பா
ரியாவர்கள்யாவர்பாலா ரவர்களேயாவரென்றா
லாவவென்னடைந்தார்யானே யாவதற்கையமுண்டோ. (கஅ)

போதலரிலையேநீரே பெற்றதேகொண்டுபோற்றிக்
காதலாற்றூயவன்பர் தந்ததேகளித்துக்கொள்வ
னாதலாலீவநோற்ப வுண்பவற்றிவைகெளேகொண்
டீதெலாமெனக்காய்த்தந்தா லென்னையேயெய்தலாமால். (கக)

எப்பொருடனக்குமியா னொத்திருத்தலாலெனக்கியாரு
மொப்பர்களினியரின்னா தாரெனவொருவரில்லை
யிப்படியறியுமன்பர் பக்கலேயானுநிற்ப
னப்படியவருமென்பா லங்ஙனேயமர்ந்துநிற்பார்.

ஊணையேமுதலாயென்பா லொருக்கியென்னுணர்வார்நாளு
நாணையேவிட்டுத்தீமைபுரியினு மவர்கணல்லா
ரேணையேய்புயத்தாயென்றுங் கேடிலாவின்பமல்லா

தாணையேயொருகேடில்லை யெங்கணுமவருக்கையா. (உக)

வணிகருமற்றவேளாண் மாந்தருமகளிர்தாமும்
பணிவொடுமென்னைப்பேணிப் பற்றறுத்திடுவரென்றா
லணிமுடியரசர்மேன்மை யந்தணரடைவராகிற்
றணிவரும்பிறவிதீரச் சாற்றவேண்டுவதுமுண்டோ. (உஉ)

மின்னையேயனைவாழ்வி னின்றநீவிருப்பினோடு
மென்னையேவணங்கியென்று மென்னையேநினைதியாகி
லென்னையேயடைதியென்றே யியம்பினானிலங்குவாட்கட்
பின்னையேய்முறுவலோடும் பேய்முலையுண்டபெம்மான்.

ஒன்பதாவது
மாயாவிகாரவத்தியாயம் - முற்றிற்று

பத்தாவது
விபூதி அத்தியாயம்

அரியவென துநிலைமையைமுன் பளவேசொன்னேனது கேட்டே
யுரியமனனிற்களிகூர வுவவாநின்றவுனக்கதனை
விரியமொழிவன்கேளென்று வேதத்தலைக்கேவீற்றிருக்குங்
கரியமுகிலான்செய்வயாற் காதல்கூரக்கட்டுரைப்பான். (க)

வேறு

தேவர்களுமுனிவர்களு மசுரர்களுஞ்சித்தர்களும்
யாவர்களுமறியாரென் பெருமையையென்பழைமையினாற்
சாவகையும்பிறப்புமிலா வெனையறியத்தகுவாரப்
பாவவினையறவிட்டுப் பரகதியையடைகிற்பார். (உ)

புத்திபொறைதவஞானம் புகழ்பழிதீர்கொலைதெளிவு
சத்தியநற்சமைதமைநற் செபந்தானஞ்சாவுபிறப்
பத்திகொடுநிறைவின்ப மிடரஞ்சலஞ்சாமை
யித்தனையுந்தோன்றுவதென் னிடைநின்றேயெனத்தெளிவாய்.

வேறு

எனைத்துவிதத்த தவத்தெழுவோரு
மனைத்தையுநிற்ப நடப்பனவாக
* மனைத்தமனுக்களோர் நால்வருமென்ற
னினைப்பிலுதித்தன ரென்பதுநேர்வாய்

இப்பரிசென்னை யறிந்தவரென்பால்
வைப்பார்கள்சிந்தையை மன்னுயிரோடு
மப்பரிசேயறி யாரையுமாங்கே
யுய்ப்பருரைப்பர்க ளிப்பருவப்பர்.

நிரந்தரமிப்பரி சென்னை நினைப்பார்க்
கரந்தைகெடுத்தெனை யாயுமனத்தைப்
புரந்துகொடுத்தவர் தேர்பொருளாயே
வரங்களுமுற்ற வளித்தவரத்தால்.

*மனைத்த - என்றதற்குப்பொருள் நன்னூலில் பழையன கழிலும் புதியன புகுதலும் வழுவலகாலவகையினானே என்னுஞ் சூத்திரப்படி வனைத்தவென்று கொள்க.

மற்றவர்நெஞ்சின் மயக்கிருளெல்லா
மற்றமின்ஞான விளக்கொளியாலே
பற்றறுவிப்ப னெனப்பழையோன்முன்
கொற்றவன்மற்றிது கூறவலித்தான். (எ)

வேறு

பேதமுடையபிறப்பகன்றான் பிறழாநிறைவு பெருஞ்செல்வ
மாதிதேவன்பரப்பிரம மழிவில்லாதானாரணங்க
ளோதவரியவுத்தமனிங்கெல்லா முயிர்ப்பானெனவுன்னை
நீதிமுனிவருரைத்தவெல்லா நீயேயருளிச்செய்தனையால். (அ)

எல்லாப்பொருட்குந்தனிவித்தே யெல்லாப்பொருட்குமீசனே
நல்லார்புகழுந்தேவர்கட்கு முலகங்களுக்குநாயகனே
யல்லாலறிவாராரென்னை யானேயறிவனெனவருளுஞ் [தேன்.
சொல்லாலுளவப்பொருளெல்லா மெய்யேயானுந் துணிந்தொழிந்

வேறு

மெய்வகையவுலகினிடை வேறுவேறாய்நிற்ப
தெவ்வகையவுருவமுனைச் சார்ந்ததெனவறிகிலே
னவ்வகையவெப்பொருளு மொளியாமலடியேனுக்
குய்வகையநெறியாகவுரைத் தருளென்றேயுரைப்பான்.

ப்ருகாநின்றேற்குனது திருவாக்காம்பராவமுத
மொருகாலுமார்கின்றதிலை யடியேற்குரையென்ன
வருகாலநிகழ்காலஞ் செல்காலமென்றிவற்றிற்
பெருகாதகுறையாத பெருமாயன் பேசுவான். (கக)

வேறு

இறந்தவென்விபூதிக்கோ ரெல்லையின்மையிற்
பிறந்தனமுடிவுறப் பேசவொண்ணுமோ
வறந்தருமனத்தினா யவற்றிலேசில
சிறந்தனகூறுவ னென்றுசெப்புவான். (கஉ)

வேறு

ஓதிற்பெருகும்பூதங்கட் கெல்லாமிதயத்துள்ளுயிர்நான்
பேதித்திடுமிப்பொருட்கெல்லாம் பிறப்புநிலைகேடாவேனா
னாதித்தியரில்விட்டுணுநான் மருத்துவரின்மரீசியுநான்
சோதிக்கதிரிலிரவியங்கி யென்று சொல்லப்படுவேனான்.

வேறு

சந்திரனானாண் மீனிற் சாமநான்மறைகளினி
லிந்திரனான்றேவர்களி லிந்திரியங்களின்மனநா
னெந்திரமாமுருவுகளிற் சேதனனானுருத்திரரின்
மந்திரமாஞ்சங்கரனா னியக்கரில்வைச்சிரவணனான். (கச)

மலைகளின்மா மேருவுநான் வசுக்களிற்பாகவனுநான்
றலைவர்களிலறுமுகனான் சலநிலையிற்சாகரநான்
நிலையமிலாயாகத்திற் செபயாகமாவேனா
னிலையுடையவெனுமிவற்றி லிமவானாய் நின்றேனான். (கரு)

பெருமுனியிற்பிருகுவுநான் புரோகிதரிற்பீதகனான்
மருவியவாக்கவற்றோநான் மரங்களிலவைத்தரசுநான்

பொருவரியநாரதனான் புத்தேண்மாமுனிவர்களிற்
றிருவியல்கட்தருவர்களிற் சித்திரத்தேரவனுநான். (கசு)

சித்தர்களிற்கபிலமுனி திரைகடலிலேபிறந்த
வுத்தமாம்புரவிகளி லுச்சைச்சிரவமுநானே
யத்தமுடைவிலங்குகளி லியானயிராவதமாவேன்
வித்தகமா நுடப்பிறப்பில் வேல்வேந்தராவேனான் (கஎ)

வேறு

படைகளில்வச்சிரம் பாம்பில்வாசுகி
யடைவருமனந்தனா கரசர்தங்களிற்
கொடைபயில்சுரபி கோகுலத்திற்கூறிய
வடைவொடுமிவையெலா மியானென்றேயறி. (கஅ)

வருணனுமியமனும் வரவிலாளியும்
பெருமைசெய்யசுரரிற் பிரகலாதனு
மிருமையினெண்ணுவா ரெண்ணுமியானெனச்
செருமலிதோளினாய் தெளியத்தேறுவாய். (கக)

பொராவருங்கருடனான் புள்ளின்மாக்களின்
விராவருமடங்கனான் வாயுவேகநா
னிராமனானெறிபடை வீரர்தங்களிற்
கராமுநான்மீன்களி லாற்றிற்கங்கைநான்.

வேறு

பெண்களிற்புகழ்திருச் சொன்மேதைபொறைதிண்மை பேச
நினைவென்னவே, யென்பகுத்தவெழுவோரு நானிருதுவாறில்லந்த
விளவேனிநா, னண்பநற்பெரியசாமனானுரிய சாமமேழினுநலத்தினான்,
மண்களிப்பருவரு திங்களிற்புகழ் நின்றமார்கழியுமற்றுநான்

வேறு

கல்லாருந்தோளினாய் கவிகளிற்காயத்திரிநான்
றொல்லாயங்களிற்சூது துணிவார்பாற்றுணிவுநான்
வெல்வார்பால்வெற்றிநான் மிகுதிறலோர்பாற்றிறநா
னல்லார்பானன்மையுநான் ஞானிகள்பான்ஞானமுநான். (உஉ)

வேறு

மிக்கசொற்றொகையனைத்துநானரிய விச்சையிற்பிரம விச்சை நா,
னக்கரங்களிலகாரநானளவில் காலநான துவுமின்றியே, தக்க
தொந்துவசமாசநானிருவினை ப்பயன்கடருவேனுநான்,
மிக்கமன்னுயிர்களைக்கொல்வேனுமவை யுற்பவஞ்செய்திடுவேனுநான்.

வேறு

கண்ணனுநானியாதவரிற்கவிகளில் வித்துசனனுநான்
றண்ணளிசேர்பாண்டவரிற் றனஞ்சயனானாகின்றேன்
விண்ணவர்கோமுனிவர்களில் வேதவியாதனுநானே
யெண்ணரியமறைவுகளி னியம்பாமையாவேனான். (உச)

வேறு

இரும்புவனமனைத்தினுக்கும் வித்துநானெனைப் போக்கியாது மில்லை,
வருந்தினுமென்பெருமைக்கு வரம்புரைக்கமுடியாது வகுத்துச்சொன்னோம்.
பெருந்திருவையுடையனமெய்ப் பெருமுயற்சி யனவென்று பேசுமிந்த,
வரும்பொருள்களனைத்துமென தொளியினால்வருவன வென்றறிதிநீயும்.
(உரு)

வேறு

பலவினியுரைத்தெனிந்தப் பல்லுயிரனைத்துமெல்லா
வுலகமுமொடுங்கிநிற்ப தென்னிலோரிடத்தினுள்ளே
கலவலனவற்றோடென்றான் கஞ்சனாருயிர்போய்த்துஞ்ச
வலைகடல்வளராதேபோந் தாயர்பால்வளர்ந்தபெம்மான். (உசு)

பத்தாவது
விபூதியத்தியாயம்-முற்றிற்று

பதினோராவது
விசுவரூப அத்தியாயம்

சுருளார்கின்றதுழாய்முடியாய் சொல்லுமனமுந்தொடர்வரியா

யுருளார்சகடமிறவுதைத்தா யுயிர்கட்கெல்லாமுள்ளுயிரே
யிருளார்பவத்தேகிடந்துழைக்கு மென்பாலிரங்கிநீயிசைத்த
வருளாரமுதென்செவிகளா லாரப்பருகியயர்வொழிந்தேன். (க)

தெரியாவகைநீயெங்கு மாய்நின்றவந்தத்திருக்கோல
மரியாய்மெய்யேயடியேற்குங் காணலாமோவெனவன்பாற்
பரியாநின்றசிதகையொடும் பார்த்தன்வினவப்பழமறைதேர்
கரியானவனுக்கப்பரிசே காட்டவேண்டிக்கட்டுரைப்பான். (உ)

வேறு

எண்ணினியற்கைய தெண்ணினிறத்தது
பண்ணியொருத்தர் படைத்தறியாதது
விண்ணினியற்கை சுருங்கவிரிந்தது
கண்ணினளப்பரி தாயதுகாணாய்.

மருத்துவர்சூரிய ரட்டவசுக்க
ளுருத்திரரென்னிடை யேயுளரியாரு
மருத்திசெயற்புத மாயவனேகங்
கருத்துறவென்னிடை யேயுளகாணாய். (ச)

என்றருளிச்செய்த வன்கணிரண்டு
நன்றறிகிற்கென ஞானமளித்திட்
டன்றவனுக்கருள் செய்வகையேயாய்
நின்றவருக்கறி யாவகைநின்றான். (ரு)

வேறு

பரிந்தினியுரைப்பதெ னவன்படிவமேயாய்
விரிந்ததுலகெங்கணும் விளங்கொளியினாலே
யெரிட்தனதிசைப்புறம தின்னதெனவேதுந்
தெரிந்ததிலைவானவர்க ளானவர்திகைத்தார். (சு)

வேறு

அங்குமால்கொள்கோலமிங் களந்துகூறலாகுமோ
கொங்குண்மாலையாடைசாந்து கொண்டகோலமேவியே
யெங்குமாகியெல்லையின்றி யெண்ணில்கோடிபல்கதிர்

மங்குல்வானில்வந்துதித்த தொக்குமற்றதன்கணே. (எ)

வேறு

ஏய்வகையதாள்களொடு தோள்களுமனேகஞ்
சங்குபூ□ய்பெறவணிந்தவணி தானுமுளனேகம்
வாய்களுமனேகமொளிர் வாண்முகமனேகம்
மாயுதமனேகமெழு மற்புதமனேகம். (அ)

அவ்வகையமாயனமர் கோலமதனுள்ளே
யெவ்வகையவாயபொரு ளியாவுமெதிர்காணா
வுய்வகையனாகின னெனாவுவகைகூரச்
செய்வதறியாவிசய னிவ்வகைசெய்தானால். (க)

தொழும்புகழுமெய்மயிர் துளக்குமுயிர்சோரு
மெழும்புவனமேழு மவனன்யுயெதிர்காணான்
விழுங்கலுறுவானென விரும்பிமெய்மயங்கா
வழும்பரியுமென்செய்த னனென்றறிகலாமோ. (க)

அஞ்சுமெய்நடுங்கு மிகவன்புறுமனத்தே
நெஞ்சுமறிவுங்குழைய நின்றுதொழுநேரே
யுஞ்சுகரைகண்டன னெனாவுவ□□ரும்
வெஞ்சுடர்கொலென்றன வியக்கும்வியனெய்தா. (கக)

மண்ணுறவணங்குமயிர்க்குச் செனநிரைக்குங்
கண்ணுமனமுங்கரைய நின்றுகைமுகிழ்த்தே
யெண்ணுமுலகங்களையு மியாவரையுமேனாட்
பண்ணுமவன்முன்புசில நின்றுபகர்வுற்றான். (கஉ)

வேறு

தேவரும்வணங்குதேவ நின்றிருக்கோலத்துள்ளே
யாவருமெல்லைகாணாப் பெருளெலாமிசையக்கண்டேன்
மூவராமுதற்புத்தேளை முனிவர்களோடுங்கண்டேன்
மேவருநாகங்கண்டேன் விண்ணவர்குழாமுங்கண்டேன்.

கண்களும்வயிறுந்தோளு முகங்களுங்கருதிநோக்கி
லெண்பலவுடையவாய வுருவுகளனேகங்கண்டேன்

றண்கதிர்முடியுந்தண்டுஞ் சக்கரப்படையுமேந்தி
யொண்கர்கன லோடொன்றாயனையநின்னுருவினுள்ளே. (கச)

வேறு

இந்வுருவென்ன வுருவென்றறியுகில்லே
னந்தயேனடுவு மாதியுமனைத்து
நந்தலறியாததனை நான்மறைநாடித்
தந்தபொருளாயதனை மாயைதருசார்பை. (கரு)

என்றுமுளதாயதை யியற்றருமமெல்லா
நின்றுபிறழாவகை நிறுத்துநெறிவாழ்வைச்
சென்றுகுறையாததனை யென்பழையசேவைக்
கன்று தொடராப்பரிசு நின்றெனெதிர்கண்டேன். (கசு)

வலந்தருதிறத்தொடு வருங்கதிரண்டே
யலர்ந்தெழவிழிப்பதை யடுங்கனனெருப்பை
மலர்ந்தெழுமுகத்தை மயங்கவுலகெங்குங்
கலந்துசுடலுற்றதை வியந்தெனெதிர்கண்டேன். (கஎ)

நிலத்தினொடுவானுற நிமிர்ந்துதிசைநேர்போய்
விலக்கமறநீயுனது மேனியைவிரித்தா
லலக்கணடையாதவர்க ளாரடையவையா
கலக்கமுறுகின்ற வுலகங்களிவைகாணாய். (கஅ)

வணங்கவிமையோர்களரு மாதவர்வழுத்தக்
கணங்கொடுவியந்துபுகழ் சித்தர்தொகைகண்டே
னுணங்கவுயிர்தானவர்கள் கந்தருவருள்ளோ
ரிணங்கியினதென்றறி கிலாரையெதிர்கண்டேன். (கக)

வானடையவிம்மிவரு ணம்பலவுடைத்தாய்ப்
பேய்நடையவாயபிறை போலெயிறுபேழ்வாய்
தாணுடையவாயபன் முகம்பலதழைக்கும்
யானடையலாம்வகைய தன்றிவுருவெந்தாய்.

வேறு

தஞ்சமிவ்வுலகுக்கெல்லா மாய்நின்றதன்மைகண்டே

னுஞ்சினனெனினுமற்றுன் னுருவுறக்காணகாண
நெஞ்சமுநடுங்காநிற்க நிலையில திசையுங்காணே
னஞ்சலென்றருளவேண்டு மகிலமுமாயவெந்தாய். (உக)

நூற்றுவர்தாமுந்தங்கள் சேனையுமவர்கட்காக
வேற்றெதிரரசர் மென்படைதானுமுன்றன்
கூற்றுறழெயிற்றிற்பட்டுக் குறையுடலாகாநின்று
காற்றுதீயினன்ன முகங்களில் வீழக்கண்டேன். (உஉ)

ஓதருநதிகளெல்லாங் கடலடைந்தாற்போலுன்னிற்
போதருபொருள்களெல்லா நின்னுளேபுகுதக்கண்டேன்
றீதனில்விட்டில்பாய்ந்தாற் போலநின்முகங்யினாளுள்ளேயிர்
மாதவவுயிர்களெல்லாம் வீழ்ந்துமாய்குனவுங்கண்டேன்.

ஒளியினாலுலகமெல்லா மொழித்தவையூண்போதாமல்
வெளியினாநீட்டிநீட்டி வெறுஞ்சுவைகொள்ளாநின்றாய்
தெளிகிலேனுன்னையுன்றன் செய்கையுந்தெரிக்கமாட்டே
னளியினாலடியேற்குன்னை யுள்ளவாறருளிச்செய்வாய். (உச)

என்றவன்வணங்கிக்கேட்ப யாவுமாயெல்லையின்றி
நின்றவனுரைப்பானுன்னை யொழியநின்றவரையெல்லாங்
கொன்றுயிர்ப்பருகலுற்றேன் கடையுகங்குறுகலுற்ற
வன்றுலகடையமாய்க்கு மவனியானறிநீயையா. (உரு)

வேறு

இறந்தாரேயெனக்கருதிங் கிவர்களெலாமென்னாலே
யறந்தானுமதுநீயே யாங்கவரைக்கொன்றாயாற்
சிறந்தாயவரசினையுஞ் செய்த்தினில்வாழ்திருவினையும்
பிறந்தார்கள்பெறாதபெரும் புகழினையும்பேணென்றான். (உசு)

வேறு

இவ்வகைமொழியக்கேட்ட விசயனென்செய்தானென்னிற்
கைதலைமிசையவாகக் கட்டுரைகுழறக்கண்ர்
பையவேநெஞ்சிற்றேறப் பயத்தொடும்பரிவினோடு
மைவரையெடுத்தவள்ளல் பெருமையைவழுத்தலுற்றான். (உஎ)

வேறு

ஞானமுதலிந்தியங்க ளனைத்திற்குநாயகமே
யூனவினைத்தளையறுப்பா யுன்னுடையபுகழ்கேட்கில்
வானவருஞ்சித்தர்களு மனங்களித்துமகிழ்வெய்தத்
தானவருமரக்கர்களுஞ் சாய்துயரப்படுவர்களால். (உஅ)

கையும்பதமுந்திருவாயுங் கண்ணுஞ்செய்யகருமுகிலே
யையைம்பொருளுமறிவரியா யயனார்தாயேந்தமிலாய்
மெய்யும்பொய்யுமில்லாதா யெல்லாமாகிவிரிந்தாயே
யுய்யும்பரிசுநினைந்தவர்க ளுன்னை வணங்காதவருளரோ. (உக)

ஆதிதேவனாவாய்நீ யாக்கைக்கமைந்தவாருயிர்நீ
யேதுமறியப்படாமையுநீ யெல்லாங்கடைக்காற்புகலிடநீ
யோதியுணர்கின்றாயுநீ யுணர்வாலுணரப்படும்பொரு
நீதியமனாயழிப்பாய்நீ நீருங்காற்றுமாவாய்நீ.

ஏயும்பரிசிவ்வுலகெல்லாமென்றும் பிறப்பித்திடுகின்ற
தாயும்பிதாவுமாவாய்நீ தாய்தாய்தந்தைதாதையுநீ
யாயும்யேயல்லாதவை யாவுன்னையடியேனென்
மாயும்பிறவித்துயர்தீர நூறாயிரக்கால்வணங்கினேன்.

என்பேரிடும்பைகெடும்வண்ண மின்னந்தொழுதேனெந்தாயுன்,
முன்பேதொழுதேன்னுடைய பின்பேமுறையால்வணங்கினே,
னன்பேயடியேனாருயிரே யகலாவிந்தப்பெரும்பிறவி, வன்பே
கெடவுன்றனை யெங்கு மறித்துமறித்தும் வணங்கினேன்.

வேறு

தேவதேவநின்னில்வேறு தேவரேது தெய்வமேது
பாவமேதறாங்களேது பற்றியாதுவீடியாது
சாவதேதுவாழ்வ தேதனைத்துமாயதன்மைநீ
யாவதேதுமொன்றுநா நறிந்திலேனென்மாயனே.

நீதிவேதம்வானுளோர் நிலத்துளோர்நினைந்துநைந்
தோதியோதியுட்கசிந் துணர்ந்துமுன்னைமுன்னமே
சாதிபேதமாகிவாழ் சராசரங்களுக்கெலா
மாதிமூலமென்றுநா னறிந்திலேனென்மாயனே.

சாயைபோலும்வாழ்வுமாடு வீடுதந்தைதாயெனும்
பேயையேறிமாறியே பிறந்திறக்குமீதொலாந்
தூயையாகியாதுமோர் தொடக்கிலாதுநின்றநின்
மாயையாவதென்றுநா னறிந்திலேனென்மாயனே.

யாதவாவென்மைத்துனா வடாவசோதையின்னுயிர்க்
காதலாயகாலியாய கண்ணகண்ணவென்றுநா
னோதலாவதன்றியே யுரைத்ததீமையாவையு
மாதகாதென்றுநா னறிந்திலேனென்மாயனே.

ஏறுமல்லுவென்றுகுன் றெடுத்தவண்ணமெண்ணியே
கூறுமல்லறீரவும்பர் கூறுகின்றகொண்டலே
வேறுமல்லையொன்றுமல்லை மெய்மைகூறுமப்பொரு
ளாறுமல்லையென்றுநானறிந்திலேனென்மாயனே.

வேறு

என்னுடையதோழனென வேகருதியாது
முன்னுடைமேன்மையினை யொன்றுமுணராதே
வன்மையினின்மொழி மறித்தெதிருரைத்த
புன்மொழிகளானவை பொறுத்தருளுகண்டாய்

உண்ணல்விளையாடுத லுறங்குதல்சிரித்தல்
பண்ணலுறுபோது களினும்பழமையாலு
மெண்ணலறியாமையினில் வந்தபிழையெல்லாங்
கண்ணகருணாகர பொறுத்தருளுகண்டாய்.

வேறு

உண்டாயவுலகனைத்து மீன்றாய்நீயே யெவராலுமுன்னுண் யுணர்ந்துகூறிக், கொண்டாடப்படுவாய் நீ மெய்மை நல்கிக்குருவாகிக் குற்றங்கடீர்க்கின்றாய்நீ, யென்றாலுமறையனைத்து முன்னின் மிக்கா ரில்லையெனநின்றேதுவெடுத்துக்காட்டக், கண்டாலுநின் பெருமைகாணமாட்டார் கண்ணிலாதவர்வேறுகாண்பதுண்டோ.

அறியாதபருவத்துமகன்செய்குற்ற மருந்தாதை பொறுத்தன வுமாவிபோலப், பிறியாததோழன்செய்குற்றநட்பிற் பெரியோர்க

ள்பொறுத்தனவும்பேதையேனாய்க், குறியாதுசெய்வருங் குற்ற மெல்லாங்
குணமாகக்கொண்டருள வேண்டுமென்றே, வெறியாரு
மலர்ப்பதங்களியேவீழ்ந்து வேண்டிக்கொண் டிவையின்னம்
விளம்பலுற்றான்.

வேறு

பண்டுகண்டறியாப் பழங்கோலத்தைக்
கண்டுநெஞ்சங் கலங்கிக்களிக்குமாற்
றண்டு நீண்முடி சங்கொடுசக்கரங்
கொண்டகோலத்தையே கொண்டருளுவாய்.

வேறு

என்றவனுரைதிடலு மெவ்வுருவுமொன்றாய்
நின்றவனுரைத்தருளு வானிறையொளித்தாய்
மூன்றருமுதற்பொருளு மாய்முழுதுமாய்
வென்றனுருவத்தினைமுன் யாவரறிகிற்பார்.

வேதநெறியாலுமிகு வேள்விகளினாலு
மாதவமாதலுமகிழ் தானவயை□லுங்
காதலர்கள்காணமுடி யாவடிவுகண்டா
யேதமறியாதவெனை யோகவலியாலே.

இப்பரிசுரைதருளி யீரிருகையோ
யப்பழையகோலமது வாயருளியங்கே
மெய்ப்பயமகற்றிவிச யற்கிசையவேறே
யொப்பவரின்மிக்கவ ரிலாதவனுரைப்பான்.

வேறு

கண்டவரில்லைநீமுன் கண்டவிக்கோலங்காண
வண்டருமயாநின்ற ராதலாலன்புகூருந்
தொண்டருமாகின்னை யன்றியோர்தொடக்கிலாமை
கொண்டவரடைவரென்றான் கோகுலமேய்த்தகோமான்.

பதினோராவது விசுவரூபவத்தியாயம் முற்றிற்று

பன்னிரண்டாவது
பத்தியோக அத்தியாயம்

ஏயநானெதிரேகண்ட வுருவமேயிசைகிற்பாரோ
தூயநான்மறைக்குமெட்டாப் பொருளையேதொடர்கிற்பாரொ
தாயனாய்பெரியோரென்று தனஞ்சயன்வினவத்தானோ
ராயனாய்நிரைகண்மேய்க்கு மாயன் வேறருளிச்செய்வான். (க)

மன்னநீகாணநான்முன் காட்டியவடிவைநெஞ்சா
லுன்னல்வாய்மொழியினாலே யுரைத்தல்செய்பவர்களெல்லா
மென்னலாற்பிறிதொன்றெய்தாரி யாரினுநல்லரிங்குச்
சொன்னவரன்றிமற்றை யவர்கடந்துறையுங்கேளாய். (உ)

உரைசெயற்கரிதாய்நெஞ்சினுணர்விடப்படாதாயெங்கும்
புரையறக்கலந்துபோக்கு வரவின்றிப்பொலிந்ததொன்றைக்
கரைசெயற்கரியவாய புலன்களைக்கடந்துகாண்பா
ரைசமற்றியானேயென்னி லன்னியமென்னலாமே.

காரணமிறந்தொன்றிங்குங் காட்சியிற்படாததொன்றைச்
சேர்பவர்வருத்தம்வேறு செப்பிடலாவதன்றோ
லோர்வரிதிதுதான்வாழு முயிர்களாலாவதொன்றோ
வாரவர்பெருமைதன்னை யளவறுப்பவர்களையா. (ச)

யாவர்கள்சிலவரெல்லா வினையுமென்கண்ணேவிட்டிட்
டியாவர்தமறிவென்பாலே யாக்குவாரவர்கடம்மைச்
சாவதுமுதலாயுள்ள துயர்க்கடனின்றுந்தாங்கி
யாவர்களேனுங்காலஞ்சி றிதிலேயெடுக்கின்றேனான். (ரு)

வேறு

மெய்யுறவுன்னையென்னிலே வைத்தா லென்னில்வேறின்றி பொன்றாதற், கையுறவில்லையதுமுடியாதே லாயினுமதனையேபயில்வாய், பொய்யறவதுவும்புரிகிலாயெனிலுன் வினைகளென்பொரு டினாற்புரிவாய், செய்யுமவ்வினைகள்ப்படிச்செயாயேல் வினைப்ப ன்றவிரவேசெய்வாய். (சு)

வேறு

அத்திஞானம் வினையினதனினு
மெத்தியானமிகு மதின்மேலவாம்
வித்தினாயவினைப்பயன் வீடுதல்
சித்தசாந்தியதனினுஞ் சீரிதால். (எ)

வேறு

இருவகையுயிர்க்குமினியனாயின்பதுன்ப மியானின்னதென்றறியா,
தொருபொருளாலுங்குறைவுபாடின்றி யுள்ளமுமொருவழிப்படரப்,
பொருவருந் துணிவுங்கருணையும்புரிந்து புலன்றெரியுணர் வையென்பாலே,
மருவிநின்றொழுகுமியோகியென்பவன் காண்மன்னமற்றெனக்கு
வேறினியான். (அ)

உலகமுந்தானும் வேறிலாமையினாற் றானொருபொருட்குமஞ் சாதே,
யலகிலாவுயிர்கட்கினியனாதலினா லவைகளுந்தன்னையஞ்சாதே,
புலவரானவர்கள் புகழவேநிகழ்வான் பொறாமையுமயக்கமுங் களிப்பு,
மிலகிடாநெஞ்சத்தியோகியென்பவன் காணியாரினுமெனக்கு வேறினியான்.
(க)

ஒன்றினுமாசையின்றியிந்தியங்கடன் வழியொழுகிடாதொருக்கி,
நன்றியினோடுதீங்கினிதொத்து நல்வினைதீவினை துறந்து,
பொன்றினுநோவுற்றழிதல்செய்யாதே பூரித்தல்வாடுதலின்றி, யென்று
முன்பிழந்தபொருட்கிரங்காதே வரும்பொருட்கிச்சைசெய்யாதே.

வேறு

இகழ்பவர்நட்டாரென்ப தின்றியேயின்பதுன்பந்
திகழவமானமானஞ்சீதமோடழலின் றீமை
புகழ்பழியிவற்றுளொத்துப்பொருந்திவாழிடமொன்றின்றி
நிகழ்தரும்யோகிகண்டாய்மற்றெனக்குரியநீரான். (கக)

செயத்தகுவதுவுமாசிச்சேர்ந்தவர்செல்லறீர
வுயக்கொடுபோவதாயபொருளையானுரைத்தவண்ண
மியற்படவுணர்கிற்பாருக்கியான்மிகவினியனென்றான்
மயக்கறவொருவராலுமறிவரிதாயமாயோன். (கஉ)

பன்னிரண்டாவது

பத்தியோகவத்தியாயம் - முற்றிற்று

## பதின்மூன்றாவது
## சேத்திர சேத்திரக்ஞ அத்தியாயம்

விடம்படுபணாமுடியரங்கின்மிசையேறி
நடம்பயிலுநாயகன்மறித்துமிகுஞானஞ்
சடம்படுபிணிப்பிறவியென்றிவைதரிக்கு
முடம்பொடுயிரானவையுரைத்தருளலுற்றான். (க)

உடம்பெனவுரைப்பதுயிருண்பவைகளெல்லா
மிடம்படவிளைப்பதெதிர்காணலுறுமீதாற்
றிடம்படவுமற்றிவைதெரிந்துணருமெய்யைக்
கடம்படுமுயிர்ப்பொருளென்பகர்வர்கற்றோர். (உ)

மன்னவுடலியாவையினுமன்னியறிவாய்நின்
றுன்னுமுயிரியானிவையிரண்டினையுமோர்காற்
றன்மையினையாதறியுமற்றாதனைஞான
மென்னவுணர்வாயிதுவெனக்குமிசைவாமால்.

மற்றிவுடறன்னில்வரவுங்குணமும்வந்தாங்
குற்றமைவிகாரமுமுயிர்த்தொகுதிதானு
நற்றவர்கவேறுபடவோதினர்கணானுஞ்
சொற்றொகையினாலிவை சுருங்கமொழிவன்கேள். (ச)

எப்பொருளினும்பெருகி யெங்குமுளவாகு
மப்பெரியபூதமவையைந் துமவையீனு
மொப்பரியநானுமதுவந்துமுனுதிக்கப்
பொய்ப்பகையில்புந்திமனனென்ற பொருடானும். (ரு)

காதலிலிவ்வெட்டுவிளை காரணமுமொன்றா
யோதவரிதாயபுலனைந்துமவையுண்ணு
மாதலறியாதபொறியைந்துமவையாலே
பேதவினைசெய்கரணமூன்றினொடிரண்டும். (சு)

இன்றிவையனைத்துமிடரின்ப முதலியாவுந்
துற்றமைவிகாரதைதொடர்ந்து தொகைகண்டாய்

நற்றவவுடம்பெனவியம்புவதுநல்லோ
ருற்றவுடலுக்குரியஞானமுமுரைப்பாம். (எ)

வேறு

மானமும்பிறர்தனைமதிக்கப்பண்ணலு
மூனமும்பிறவுயிர்க்குறுகண்செய்கையும்
யானெனுஞ்செருக்குமிவ்விகபரங்களி
லானபேராசையோடறுக்குமாற்றாலும். (அ)

பெற்றநன்மனையொடுபெண்டிர்பாலர்பா
லுற்றெழுமவாவிடலுடம்பின் றூய்மையு
மற்றவைம்பொறிகளின்வாயில் வாழ்க்கையுஞ்
செற்றமுஞ்சிறியவர்குழுவுந்தீர்தலும். (க)

ஒருபெரும்பொருளை யேயுளத்துள்வைத்தலு
மிருவினைகடப்பவரிடங்களெய்தலுங்
குருவினைவழிபடுகுணமுங்குற்றமி
லுருவினையுள்ளவாறுணருமுண்மையும்.

முன்றிகழ்பிறப்பொடுமூப்பிறப்பினாற்
சென்றடையிடும்பையைச்சிந்தை செய்கையு
மென்றிவையனைத்து மற்றிவற்றினாலினிச்
சென்றடைபொருளினைத் தெரிந்துகேளனா. (கக)

வேறு

ஆதியந்தமிலதழி யாதுநின்றபெருமைய
தோதிலுண்டதிலையெனுமூனமின்றியொளிர்வது
நீதியின்கணகிலமுமாகி யெங்குநிறைதலி
னோதருங்கைசெவிதலைகால்களெங்குமுடையது. (கஉ)

வேறு

பூதமைந்தினகத்தினோடுபுறத்தினும் பொலிகின்றதிங்
கேதமின்றிநடப்பநிற்பனவாயிருப்பததின்னதென்
றோதரும்படி நுண்ணிதாகியதொன்றதாகியிருந்துமெய்ப்
பேதம்வந்தது போலநின்று பிணங்கவும்படுகின்றதே.

காணும்புலன்களனைத்தினுக்குங்கண்ணாய் நின்று காட்டுவது
பேணும்புலன்கடனக்கொன்றுமில்லாதியன்ற பெற்றியது
பூணும்பற்றுந்தனக்கின்றியெல்லாந்தானே பொறுக்கின்ற
தாணும்பெண்ணுமாங்குணமுமன்றியெங்குமாகியது.

வேறு

அருவமாயதி தூரமாயதனைத்துமாயதணித்துமா
யுருவமியாவுமளித்துமீளவொழிக்குநாளிலொழிப்பது
பொருவிலாவொளிகட்குமுள்ளொளியாகியேபொலிகின்றதில்
கிருமைவீடியஞானமோடதின் ஞேயமாகியிசைந்தது.

ஆனவிப்பொருண்முன்புரைத்தவவற்றினாலறியும்பொரு
ளூனமற்றமனத்தினாய்நல்லுடம்புமற்றாவுடம்புசேர்
ஞானமுற்றுமவற்றினாலறியப்படும் பொருணன்மையு
மீனமற்றாதிறத்தினோடு சுருக்கமாகவியம்பினேன்.

எள்ளலானதிகந்துயான் முனுரைத்தவிப்பொருளீதெலா
முள்ளவாறுதெரிந்தெனன்பர் தமக்குணர்ந்திடவோதினார்
கள்ளமார்தருமாய வேலைகடந்துகாதல் செய்யின்பமாம்
வெள்ளமாமெனையெய்துவாரெனவேறு கூறவிரும்பினான். (கஎ)

வேறு

ஓதியவுடம்பிற்கு முயிர்க்குமுண்மையா
யாதிகண்டறிபவரி யாருமில்லையாற்
றீதிலிவ்விரண்டுமுன் செய்வதென்னெனி
னீதியிலிவற்றையு நிகழக்கூறுவாம். (கஅ)

நண்ணியகுணத்தின் வேறின்மைநாட்டலாற்
கண்ணியவினைகளுக் குடம்புகாரண
மெண்ணியதுன்பமோ டின்பமென்றிவை
யுண்ணியகாரண முயிரென்கின்றதே. (கக)

இவ்வுயிரிவ்வுடம் பிதனிலேயிருந்
தவ்வுடல்பயத்திடுங் குணங்களானவை
துவ்விடுமிறந்திடுந் தோன்றுமிக்குண

மெவ்வநானுடையன வென்றிருத்தலால்.

உண்பனயாவையு முண்கின்றானுமெய்க்
கண்கொடெப்பொருளையுங் காண்கின்றானுமென்
னண்பவெப்பொருட்கு மொத்திருக்குநாதனு
மெண்செய்திவ்வுடம்பி லேநின்றவீசனே. (உக)

இப்படியுயிரையு மியாக்கைதன்னையு
மெய்ப்படவறிந்தவன் வேட்டவேநுகர்ந்
தொப்பரவன்றியே யொழுகிவாழினும்
பொய்ப்படுபிறவியின் மறித்தும்போகலான். (உஉ)

செறியுமிப்பொருளினைச் சிலர்தியானமாங்
குறியினாற்றம் முளேகண்டுகொள்வர்க
ளறிவருஞ்சாங்கிய யோகமாகிய
நெறியினாரெங்குமாய் நிற்பக்காண்பரால்.

இருமையுமறிவதற் கிடமிலாதவ
ரொருமகன்றெய்வ மென்றுரைத்தவொன்றையே
யருமையிலருச்சனை செய்வராலதன்
பெருமையிலவர்களும் பிறவிமேவிடார். (உச)

போனவனநிற்பவாமி யாக்கைபூண்டுகொண்
டியாவருந்துயர்ப்படு கின்றவீதெலா
மேவருமுடலுயிர் வேறுபாட்டினை
யாவர்கண்டறிவதோ ரறிவிலாமையே. (உரு)

வேறு

கெடுகின்றபூதங்க டோறுங்கெடாதே
வடுவின்றிநின்ற மறைப்பொருடன்னை
நடுவென்றுகண்டவ னல்லனவெல்லாங்
கடுகின்றுணையொழியா வகைகண்டான். (உசு)

ஒத்தெங்குமாய வொருமைப்பொருளினை
யத்தன்மையினாலறியு மவனே
செத்தும்பிறந்துந் திரியாவகைதன்னை
மெய்த்தன்மையிலே புகவிடுகின்றான். (உஎ)

வேறு

உணர்வவிகாரியென்றும் வினையெலாமுடம்பினோடே
புணர்வனவென்றுங்கண்டான் பொய்யிலாமெய்யைக்கண்டா
னிணர்மலர்முடியாயெல்லா வினைகளுஞ்செயினுமான்மாக்
குணமிலியாதலாலே யவற்றொடுங்கூடிநில்லான். (உஅ)

உன்னியவானமெங்கு மொழிவறநிறைந்ததேனுந்
தன்னுடைநுண்மையாலே பிறவொடுஞ்சார்ந்தலுண்டோ
பன்னியவிது போலெங்கும் பரந்துளனெனினுமங்கு
மன்னியவீசனந்த வுடம்பொடுமருவமாட்டான். (உக)

இரவிதானொருவனேயாய் நின்றிந்தவுலகத்தெங்கும்
விரவியவிருளைநீக்கி விளங்குறுமாறு போலத்
தரவியாவருமுன்னில்லாச் சராசரவுடம்புதோறும்
பரவியானுரைத்தமாயோ னொருவனேபரந்துநிற்பான்.

ஓரின்மேலாகிநின்ற வுயிரினோடுடம்புக்குள்ள
பேரினோடிறப்புமூப்புப் பிறப்பெனுமிவற்றைவேறாய்ப்
பாரின்மேலறிவார்வீடு பற்றினாரென்றான்பார்த்தன்
றோரின்மேணின்றே வேதச்சிரத்தின் மேலிருக்குஞ்சீரோன்.

பதின்மூன்றாவது
சேத்திர சேத்திரக்ஞவத்தியாயம் - முற்றிற்று

பதினான்காவது
குணாதீத அத்தியாயம்

செய்யமாமலர் மேலுறை செல்வியும்
வையமாமட வாளுமகிழ்ந்ததோ
ளையன்மெய்யை யன்பாலடியோமெலா
முய்யமீளவுரைக்கத்தொடங்கினான். (க)

நல்லவாறறி வியாதினுநல்லது
வல்லறீர்தவத் தோர்க்கறிவாவது
மல்லுலாவிய தோண்முடிமன்னயான்

சொல்லன்மேயவ தன்றுணிவாயதே. (உ)

இன்னதன்மையின் ஞானத்தியற்கையா
லென்னைவந்தடைந் தாரிவ்வுலகினிற்
பின்னைவந்தடையா ரிறவாரிதன்
றன்மையாதெனி லாங்கதுஞ்சாற்றுவாம்.

மூதவாவென்குண மவைமூன்றினும்
பேதமாகும் பிரகிருதிதன்னிலே
காதலால்வைப்பன் யான்கருவக்கருப்
பூதமியாவும் புலப்படுகின்றதே. (ச)

இந்தவண்ணத்தி னாலிவ்வுலகிடை
வந்தயோனியெலாம் வருவித்திடுந்
தந்தைதாயவை யீன்றளிக்கின்றதா
மந்தமாமலர் மேலயனாமன்றே. (ரு)

ஏன்றுமுன்னங் குணமென்றியம்பிய
மூன்று மூலப்பிரகிருதிதன்னிலே
தோன்றியுள்ளன தொல்லறிவைப்பற்றி
யூன்றிநிற்பதவற்றை யுணர்த்துவாம். (சு)

சத்துவமிராசத தாமதமென
வுய்த்துவந்தபெயரை யுடையன
வெத்துவந்து வமுந்தருகிற்பன
மெத்துவந்தவற்றின் செயல்வேறுகேள். (எ)

பற்றுமாசின்மையாற் பளிங்கொப்பது
வுற்றநல்லறிவான துண்டாக்குவ
தெற்றுமின்பமல்லாற் றுன்பமென்பது
சற்றுமில்லது சத்துவமாவதே. (அ)

ஓதுமாசையிதிற் பிறந்துள்ளது
தாதுகற்புரை யுண்ணிறஞ்சார்ந்தது
பேதுசெய்வினை யோடறிவைப்பின்னற்
கேதுவாய திராசதமென்பதே. (க)

குறியுநீல மயக்கமுங்கோதிலா

நெறிகளான திகத்தலுநித்திரை
செறிதலானது மற்றிவற்றாற்றிண்ணென்
றறிவைமாய்க்கு மதுதமமாவதே.

வேறு

உலாசெய்சத்துவ மின்பத்துய்த்திடு
மிரசதம்வினைகளோ டறிவையார்த்திடும்
புரைசெய்திவ்வழுக்கையே பொருந்திப்போர்த்திடுந்
தரைசெறிபுகழினாய் தமமென்கின்றதே. (கக)

வாழுஞ்சத்துவமற்றையவ் விரண்டையுமறைத்துத்
தாழுமற்றையவ்விரண்டுமத் தமோகுணந்தழைப்பின்
வீழுஞ்சத்துவந்தமங்களவ் விரசதம்விளைவி
னூழின்மற்றிவையிரண்டுந் தாழ்ந்தொன்றுமிக்குளவாம்.

வேறு

ஒத்துநல்லறிவுமிக்கயா தொருபோதப்போது
சத்துவந்தழைத்தாகுந்தாங்கரும்வினைகளேகொண்
டுய்த்துவந்தாசைகூர லோபம்வந்துற்றபோது
மத்திமகுணமேசால வளர்ந்ததென்றறிநீமன்னா.

தக்கதுதகாதென்றொன்றைத்தானறியாத போது
மெக்கருமங்கள்மாட்டு மகிழ்ச்சியோடிருக்கும் போது
மொக்கமெய்மயக்கத்தோடுமுறக்கம்வந்துற்றபோது
மிக்கதுதமமேயென்றுவிசயநீயறிய வேண்டும்.

வேறு

தக்கசத்துவமே நிகழ்ந்த போதிறந்தோர்தெய்வயோனிகளிலே சார்வார்,
மக்களிற்பிறப்பாரிராசதகுணமே வளர்ந்த போதுடம்பினைத்துறந்தோர்,
மிக்கெழுந்தமமேவிளைந்தபோதிறந்தோர்விலங்குச்சாதிகளிலேவீழ்வா,
ரொக்கமற்றிவற்றின்பலன்களுந் தெரிவுரைக்கின்றேனிவற்றையுமுணர்வாய்.
(கரு)

அருங்குணமாயசத்துவபலமாமழுக்கறவிராசதபலமாம்,
பெருந்துருழைத்த றமோபலமாகும் பேதைமை பேசியமுறையே,

பொருந்தியவிந்தக்குணங்கண் மூன்றாலும் பூதசாலங்களுக்கெல்லாம்,
வருந்திருவாஞானமோடு லோபமயக்கமென் றின்னைவருமால்.
(கசு)

சத்துவமாந்தர்பரகதிடைவர்தமத்துளோர தோகதிசார்வார்,
மத்திமகுணத்தோராயினோர்நடுவின்மா நுட்ப்பிறவியாய்வாழ்வா,
ரிட்திறமாயவுருவமேவிகாரியான விகாரியென்றிவற்றை,
மெய்த்திறனாகவறிந்தவனறிந்தப்பொழுதிலே வீட்டின்பமடைந்தான்.
(கஎ)

உடம்புடனிருந்தேயுரைத்தவிக்குணங்கண் மூன்றையுமுள்ள வாறாறிந்து,
கடந்தவன் பிறப்புமூப்பிறப்பாதியாகவேகட்டுரைக்கின்ற,
விடம்புரையிடும்பையாவையுங்கடந்து வீட்டின்பம் விளைப்பவனென்றான்,
றடங்கடலிடையேவளர்ந்தவனவற்குவேறிதுதனஞ்ச யனுரைப்பான்.
(கஅ)

கண்ணியவுலகிற்கடப்பரிதாயகுணங்கண் மூன்றையுங்கடந்து
புண்ணியரியல்புமவர்களை யறியுங்குறியையும்புகன் றருளெ
வெண்ணியவுலகுமுலகில் வாழுயிருமிருவினையாக்கையுமாக
பண்ணியுமழித்து மேவிளையாடும் பரமன் வேறிவ்வகைபணிப்பா
(கக)

வாய்மையவல்லாக்குணமவைமூன்றின் காரியமாய்வருகின்ற,
வாய்மையுந்தொழிலு மயக்கமுமென்று சொல்லியதுறையிவைமூன்றுஞ்,
சேய்மையவென்றுபெறாதபோதிரங்கல் பெற்றபோமகிழ் செய்யாதான்,
றான்மயலாகாக்குணங்களோடிருந்தே யவற்றி ற்சலிப்பிக்கப்படாதான்.

வேறு

மானமவமானம்வருமின் பமிடர்மண்பொன்
னானமகிழ்வப்பிரிமன்பர்பகையானோ
ரூனவுரையோடுபுகழுற்றபொழுதொப்பா
னீனமுறுகின்றகுணமானவையிகழ்ந்தான். (உக)

இப்பரிசினால்வருகுணங்களை யிகழ்ந்தே
மெய்ப்பருவமாய பெருவீடுபெறுகிற்பா
ரெப்பரிசினா லுமிடையின்றியெமுமன்பா
லொப்பவரிலாத வெனையுன்னுமவர் கண்டாய். (உஉ)

வேறு

ஒழியாதென்றுமியாவர்க்கும்யானே யுணர்த்திவருதலாற்
கிழியாவறிவுங்கெடாவீடுங் கேடிலின்பமானதுவு
வழியாவறமுமென்னுள்ளே யுளவாகாநின்றனவென்றான்
சுழியாநின்றபெரு வெள்ளத்திடையேபண்டு துயில்கொண்டான்.

பதினான்காவது
குணாதீதவத்தியாயம் முற்றிற்று

பதினைந்தாவது
பிரபஞ்ச அத்தியாயம்

சாயையன்னவென்வினைத்தளை யறுக்கவோதகவிற்
பேயையின்னுயிர் செகுக்கவோபிள்ளையாய் வளர்ந்தான்
வேயையொன்றியவரிசிலைவிசயற்குமீள
மாயைதன்னை யோர்மரமொக்கவருணிக்கலுற்றான். (க)

வேர்மேலதுதலைகீழதுவீவில்லதுவேதத்
தேர்மேவியவிலை மேவியதியாரும்புகறலினா
லார்மேவியவசுவத்தமதென வேயரசதனின்
பேர்மேவியபெருமாயை செய்பிறவிப்பெருமரமே.

இவ்வரறிதினியல்பாகியவகையாதெனிலியாது
மொவ்வாவகை பெரிதாகியபிரமத்துருவிடையே
வைவாள்வலியுழவாவரன்முறையே வரன் முறையே
மெய்வான்முதல்வருமாதலின் மேலானதுவேரே.

ஊழால்வருமூலகாகியுமுயிராகியுமெழலாற்
கீழானதுதலையாய்வருமுதலீறிடைகிளர்வாய்க்
சூழாகியபிறவித்தொடரொருகாலமுடையப்
பாழாம்வகையழியாமையிலழியாததோர்படியே.

கருநாண்முதல்வினையால துவளர்காதல்செய்தலினா
லருநான்மறையவையேயிலையவையாமெனவறிநீ
வருநாள்களினொருநாள் பெறும்வகையின்மையினாலே

பெருநாடறியசுவத்தமதெனலாயப்பெயரே. (ரு)

மற்றிப்படிநிகழ்கின்றவிம்மாயாமரமிதனின்
பெற்றித்திறமிதுவல்லதுபிறிதின்மையினாலே
யுற்றிப்படியுணர்வார் பொருளெல்லாவுமுணர்ந்தா
ரிற்றிப்பெருமரத்தின்றி றமின்னஞ்சிலவுளகேள். (சு)

கண்ணெயெனவனையாய்பலபிறவிக்கதிவழியே
மண்ணெமுதல் கீழாமுலகிடையே வளர்வனவும்
விண்ணேமுதன் மேலாமுலகிடையேமிடைவனவு
மெண்ணேறியபவமாகியபணையாலிசைதருமே. (எ)

நெறியால்வருவினை வேர்பலநிலமாமுலகிடையே
யறியாமையொடு றவீழ்தலில் வேர்கீழினுமுளதாம்
பிறியாதெழுகுணமாகியபெரு நீர்மையில்வளரும்
பொறியாகியவிவைதான் றளிர்போன்மேயதுபொலிவே. (அ)

கனவுந்திகழ்கழுதாழியுமிகு கந்தர்வநகரு
மெனவந்தழிதலினாலுருவ துவின்றியதியாது
முனம்வந்திடுமூதனாளொடுமுடிவின்மையினாலே
தனதந்தமுமுதலுந் தெரிதரவில்லதுதானே. (க)

வேறு

மந்திரமாயவிந்த மரத்தினைத்துறவென்கின்ற
தந்திரவாளால்வெடடித் தற்பரமாகிநின்றே
யிந்திரசாலமென்ன யாவுமென்னிடையேகாட்டு
தசமிலாதவென்னை யடைகையேயடுப்பதையா.

ன்னியவாசைகோபங் கடந்தவர்காணத்தோன்று
மன்னுருவியற்கைகேட் கிலியாவையுங்காட்டுகின்ற
னியவொளிகள்காணா வகையதாய்வந்துசேர்ந்தார்
னியல்வேறொன்றாகாப் பெற்றியேனென்றுபேசும். (கக)

தாறுந்தோன்றுகின்ற வாகாயமுங்குலைதற்கேற்பத்
புனறோறுந்தோன்றுஞ் சந்திரன்றானுமென்ன
புகடோறும்வேறா யுயிரெனநின்றேயந்த
வீடம்படுபுலன்களாறு மியல்பினிலியற்றுவேனான். (கஉ)

பூக்கமழ்நாற்றங்கொண்டு போருவளிபோகுமாபோற்
றீக்கணல்கின்றவேலாய் சீவனென்கின்றசீரோ
னாக்கையையெய்தும்போது மதனைவிட்டேகும்போதும்
போக்கரிதாயவாறு புலன்களைக்கொண்டுபோமால்.

வேறு

மீன்னேயனையவுடம்புதனை விடுவதடைவதாய்விடயந்
தன்னேரிலாதானது தானேயார்கின்றா னோர்தன்மையினை
யென்னெர்காணாரறியாதா ரறிவார்யோகத்தாலேதம்
முன்னேகான்பரிதனியற்கைத் தெளிநீயின்னமொழிவன்கேள்.

வேறு

இந்தியங்களுக்குங்கண்ணா னிரவிதீயிந்துவின்பால்
வந்தெழுகதிருநானே மாநிலமாகிநின்று
கந்தியன்றனையதோளாய் காமமேமுதலாந்தன்மை
தந்திரந்தவிர்த்தீதெல்லாந் தாங்குகின்றேனுநானே. (கரு)

வேறு

முந்துவானிற்சுடர் மூர்த்தமாகிய
விந்துவாகிநின்றுண்பனயாவையுந்
தந்துசேர்சுவை யவற்றிலேதக
நைந்திடாவகை வளர்க்கின்றேனுநான். (கசு)

தின்பநக்குவ சுவைப்பவுண்பவாய்
நன்பயன்செயு நால்வகையுண்டியு
மின்பமாம்வகை யாக்கைகடன்னினின்
றன்பவங்கியாயறுக் கின்றேனுநான்.

நல்லமாந்தர் நல்லறிவுநன்கிலாப்
புல்லர்தங்கள் புல்லறிவும்போர்திகழ்
வில்லமைந்ததோள் வீரர்வீரயா
னல்லதில்லையென் றறியவேண்டுமே.

அசைவிலாமறைக்கறிவு நானதன்

வசையிலாதமெய்பொருளும் வாய்கைசே
ரிசையினாலெடுத்தோது வேனுநான்
விசையகேளினம் வேறுமொன்றையே.

மருவுகின்றதிவ் வுலகின்மாய்தலே
யுருவமாகமுன் புடையதொன்றுமே
யருவமொன்றினா லழிவதின்மையே
பொருவநின்றதோர் பொருளுமுண்டரோ.

மொழிசெய்கின்ற திவ்விரண்டுமுற்றவே
விழியினாலுறநோக்கின் மெய்மையே
யழிவதாக்கையங் கழிவுபாடிலா
தொழிவதென்னெனி னுயிரென்கின்றதே. (உக)

இவையிரண்டையுங்கடந்தியாதுமோர்
நவையுமின்றியேநாசமின்றியே
யெவையுமின்றியேயிழிவுமின்றியே
குவையினின்றதோர்குறியிலின்பமே. (உஉ)

இந்தவின்பமாமென்னை யுள்ளவா
சிந்தையின்கணேதெளிதன் மேயினார்
பந்தமொன்றிலார்பழையவிப்பொருட்
கந்தமாதிவேறறியவொண்ணுமோ.

வேதநாலுநின்றுரைசெய்தாலுமொன்
றோதலாவதன்றுலகறிந்ததோ
காதலாலெனக்கினியதோழனீ
யாதலாலுனக்கறியவோதினேன். (உச)

வேறு

கண்ணையோரிடத்துமின்றியதனிலேவைக்கிற்காதற்
பண்ணையோடாக்குகின்றவினையெலாம்பயக்குமென்றான்
வெண்ணையோவிதுரனிட்டவிருந்தையோ வேலைசூழ்ந்த
மண்ணையோவுண்டு முன்னாள்வருபசிதீர்ந்தமாயோன். (உரு)

பதினைந்தாவது
பிரபஞ்சவத்தியாயம் - முற்றிற்று

பதினாறாவது
தேவாசுர அத்தியாயம்

மறந்திருந்தமனத்திருங்கிடத்
திறந்திறப்படச்செப்புதன் மேயினா
னறந்திறந்தெரிந்தாக்குதற்காகவே
பிறந்திறந்துழல்கின்ற பேராளனே. (க)

தெய்வவாசுரரென்றித்திறத்தராய்
வையமாந்தரெல்லார்களும்வாழ்வதிங்
கையகேளவற்றின்றிறமென்றுதன்
செய்யவாய்திறந்திவ் வண்ணஞ்செப்பினான். (உ)

வேறு

அஞ்சுதலின்மையுமறிவையாக்கலு
நெஞ்சினையடக்கலு நிலைகெடாமையு
வெஞ்சினமின்மையுமெய்மைகூறலுந்
தஞ்செனவேள்வியுந்தவமுமாக்கலும்.

மறைபயிறலுந்தனை மதித்திராமையுங்
குறளை கடவிர்தலுங்கொல்கைமாற்றலும்
பிறர்பிழைபொறுத்தலும்பேரொழுக்கமு
மறன் வலிதான மேடருளையாக்கலும். (ச)

இருவகைத்தூய்மையுமிந்தியங்களை
யொருவழிப்படுத்தலுமுள்ளிட்டன்னவை
செருவருஞ்சிலையினாய்தெய்வத்தன்மையோர்
மருவியதொழிலெனமதிக்கவேண்டுமே. (ரு)

வேறு

தீமைசெய்யசுரரானோர் செய்கையைத்தெரிக்கிலொன்றை
யாம்வகையெனமற்றாகாதன வெனவறிதலில்லார்
தூய்மையுந்தூயவாயவொழுக்கமுந் தொடக்குவிட்டார்
வாய்மையொன்றானுமில்லார்மயக்கமே மருவாநின்றார். (க)

வேறு

எண்ணியவுலகமுமுலகிற்கீசனும்
புண்ணியபாவமும்பொய்யென்றேகொள்வர்
பெண்ணினோடாண் புணர்கின்றபெற்றியா
னண்ணியாவையுமென்றுநாட்டுவார்.

வேறு

விரும்பலராகியொழுக்கங்கடுறந்தார் மெய்மையுஞ்செம்மை விட்டா,
ரிரும்பயனானவறிவுமாய்ந்துள்லாரிடம்படாமனத்த டிசைந்தார்,
பெரும்பழியானதொழில்களே புரிவார்பிழைப்பு ப்பொன்றயாதா,
ரரும்பகையாவிவ்வுலகினை யெல்லாமழிப்பதன் பொருட்டவதரித்தார்.
(அ)

வேறு

நிறைவிலாக்கரமபோகந் தன்னையேநிறைக்கவேண்டி
மறைவிலாமானத்தோடுமதங்களைமருவிநின்றுங்
குறைவிலாமயக்கத்தோடு கோபத்தையடைந்துநின்றும்
பொறையிலாவிரதம்பூண்டும் பொய்த்தவம்புரியாநிற்பார்.
(க)

இறந்துபோமளவுமெய்தாப்பொருளை யேயெண்ணா நிற்பார்
மறந்துமோர்பொருள் வேறில்லைவருபயனன்றியென்பார்
சிறந்தபோகங்கட்காகத் தீமையாற்பொருளைச்சேர்ப்பார்
பிறந்துபேராசையாயபாச்ட்தாற்பிணிக்கப்பட்டார்.

இப்பொருளடைந்தோம்வேறு பொருளினையடைவோமென்று
மிப்பகைசெகுத்தோம் வேறுபகையினைச்செகுப்போமென்றுந்
துய்ப்பவரெம்மிற்றுய்க்கவல்லவரில்லையென்று
மொப்பவரெம்மின்மிக்காருளர்கொலென்றுணராநிற்பார். (கக)

இனம்வலியின்பம்பெற்றோமெம்மின் மிக்கார்களில்லைத்
தனமிகவுடையோமென்றுந்தம்மையேவியவா நிற்பார்
மனமகிழ்யாகஞ்செய்வோ மழையெனக்கொடுப்போமென்றுந்
தினமவை தோறுஞ்சிந்திப்ப வலாற்செய்வதில்லார். (கஉ)

வேறு

தொடக்கறவில்லாநினைவெனப்பட்ட சூழலைப்பற்றியேசுழல்வா
ரடக்கரிதாயமயக்கமென்கின்றவலையுளேயகப்பட்டுநின்றா [திக்
ருடற்குடில்வாழ்வாம்புன்னுனைப்பனிநீருவர்ந்திடினுயிர்நடுக்கெய்
கடப்பரிதாயநகரமென்கின்றகடல்களில்வீழவேகடவார்.

வியந்துதங்களையே மேலாய்ப்பார்த்துமெய்மாந்தர்தம்மை
நயந்துகொண்டாடலில்லார்நல்லவைசெய்தாரென்று
பயன்றொடர்ந்துரைத்தற்காகப்பாடியபழைய நூல்க
ளியம்பியபடிசெய்யா தேயாகங்களியற்றாநிற்பார். (கச)

வேறு

மன்னியகளிப்பொடுவலியுங்காமமுந்
துன்னியானெனும்பெருமயக்கஞ் சூழ்ந்துளா
ரென்னியல்பினைத்தமில்யாவர்மாட்டிலு
மன்னியமெனக்கொடு பொறாமையாக்குவார். (கரு)

வேறு

மற்றவர்தம்மையிந்தமானுடரானோரியார்க்குங்
கொற்றவகீழானோரைக்கொடுமையாலரவொப்பாரை
யற்றமிலிடும்பை சேருமாசுரயோனியாய
புற்றவைதோறுமியானேபுகப்புகவிழுத்துகின்றேன். (கசு)

வேறு

இவ்வகையாசுர யோனியடைந்தோர்
மெய்வகையாமறி வின்மையினாலே
நைவர்கடீ நரகத்ததிதோறு
முய்வகையின்றி யுழன்று திரிந்தே. (கஎ)

ஒருவனசிக்க வியற்றுவதென்று
மருநரகத்தி னடைப்பதுதானும்
வரும்வழிமூன்றுள மற்றவைதம்மை
யொருமுறைகூறி யுணர்த்திடுவன்கேள். (கஅ)

காதலினாகிய காமமுலோபமுங்
கோதுறவேசுடு தீநிகர்கோபமு
மாதலினாலிவை மூன்றுமகன்றார்
வேதனைதீர்பெரு வீடுவிழைந்தார். (கக)

கூறின நூல்வழி சேர்குறிபேணா
தேறினவாறுசெய் வாரிகலோகம்
வேறியலார்பர லோகம்விளைக்கும்
பேறினவானவை பேறுபெறாரால்.

வேறு

ஆதலிலடாத வறிகைக்குவழியான
வேதமுதனூலவை விதித்தநெறியாலே
யேதநினையாதுன் வினையேயிசைகவென்றான்
பூதமுதலானவை பொறுத்தருளுகின்றான். (உக)

பதினாறாவது
தேவாசுரவத்தியாயம் முற்றிற்று

பதினேழாவது
குணவிகார அத்தியாயம்

உண்டுமீள வொழித்துலகியாவையுங்
கண்டுகாப்பவன் கட்டுரைத்திட்டதே
கொண்டுபார்த்தனக் கொண்டல்வண்ணன்றனைத்
தொண்டுகூறிப் பணிந்திதுசொல்லுவான். (க)

வேதமேமுதனூல் விதியன்றியே
காதலாலுலகோர் செயுங்காரிய
மேதமாங்குண மூன்றினுமியாதென
வோதமாக்கடல் வண்ணனுமோதுவான். (உ)

வேறு

யாவர்களாசைப் பாடுமியம்பிடிலியம்பப்பட்ட
மூவகைக்குணமுமாகி யல்லதுமுடிந்துநில்லா

மேவருமவற்றினாய வேறுபாடதனையெல்லாங்
காவலதெரியக்கூறக் கேளெனக்கழலுற்றான்.

சாத்துவிதர்தேவரையே சரண்புகுவர்தாமதர்கள்
காத்தல்புரிவனபேயும் பூதமுமாய்க்கடைப்பிடிப்ப
ரேத்தரியகுணமிவற்றிலி ராசதமாங்குணமுடையோ
ராத்தரெனவியக்கரையு மரக்கரையுமடைகுவரால். (ச)

அடங்கியபொறியினா மறிவுமன்றியே
யிடம்படுநூல்களி னியல்புமின்றியே
யுடம்பையுமுயிரையு மாய்க்குமாதவந்
தொடங்கினரசுரயோ னியினிற்றோன்றினார். (ரு)

வேறு

உண்பனயாகமாரு முறுதவந்தானமென்ன
வொண்படவுரைத்தநான்கு மோரொன்றுமூன்றாய்நின்ற
பண்படுகுணங்களாலே கேளெனப்பற்றுவீடு
நண்பொடுபகையுமில்லான் முறையினானவிற்றலுற்றான். (சு)

துவகுணத்தோருண்டி யுரைத்திடிலழகுசார்ந்து
சித்தசுவையாகி நெய்த்துச்சிக்கெனவு சேர்ந்து
த்துவலிநோயின்மை யறிவுநல்லாயுவின்பம்
திக்கச்செய்தவிந்த வுணவுகண்மடங்கலன்னாய். (எ)

இப்படியன்றிவேறாயிரா சதருணவுகேட்கிற்
கைப்பனபுளிப்புவர்ப்புக் கூர்ப்பனகடியவெய்து
நெய்ப்பயினெருப்புப்போலச் சுடுவனவிவற்றினாலே
மெய்ப்படு நோயுநெஞ்சத் திடும்பையும்விளைவவேலோய். (அ)

ஆசினைடைந்தநெஞ்சிற் றாமதருணவுகேட்கி
லூசினபழஞ்சோறெச்சி லும்பர்பூசனைக்காகாமை
யேசியவெந்திலாத வினையனவிவற்றினாலே
காய்சினமுதலாயுள்ள துயரெலாம்விளைவகண்டாய். (க)

செய்த்தகுவனவென்றல்லாற் சேர்பயன்சிந்தியாதே
தயக்கநூன்முறை செய்யாகஞ் சாத்திகஞ்சாரியாகம்
பயத்தையேவேண்டியாதல் பலர்புகழ்வேண்டியாத

லியற்றுறும்யாகமெல்லா மிராசதயாகமாமே.

நூற்படுநெறியுமின்றி நுனித்தவவ்வினையின் மேலோர்
தாற்பரியமுமதின்றித் தக்கமந்திரமுமின்றி
யேற்பவர்க்கீதலின்றி யியற்று றுகின்றயாகந்
தார்ப்பொலிகின்றமார்பா தாமதயாகமாமே. (கக)

வேறு

தீக்குலாம்வேலினாய்த வத்தின்செய்கைதான்
வாக்கினாற்பேசுதன் மனத்தினாக்குத
லாக்கையாலியற்றுத லாயிருப்பது
நோக்கிநாமிவற்றினை நுனித்துக்கூறுவாம். (கஉ)

வேறு

தீர்த்தயார்க்குஞ் செவிக்கினிதாயின
வார்த்தைமாமருந் தேயெனலாவது
வோர்த்துமெய்மொழி கூறுதலோதுதல்
வார்யை□ற்பண்ணு மாதவமாவதே.

தெளிவினெஞ்சைத் தெளியப்பிடித்தலுங்
களிசெயைம்புலனைக் களிமாற்றலுங்
குளிர்வினெஞ்சினு ணர்வுகொடாமையு
மெளிதின்மானது மாதவமென்பதே.

தலைமைந்தணர் தேவர்குரவர்பான
மலைதலின்றிவழி படுவாழ்க்கையுங்
கொலைதுறத்தலுங் காமங்குறைத்தலுந்
தலைவகாயத் தவமெனப்பட்டதே. (கரு)

வேறு

தீத்தவமும்வடிவேலோய் செப்பியவிம்மூன்றாலுஞ்
சாத்துலகமகிழ்வெய்தச் செய்கின்றவருந்தவத்தி
னார்த்துவரும்பயன்வேண்டா தாகின்றவருந்தவந்தான்
சாத்துவிததவமென்று சாற்றுவதுதக்கோரே. (கசு)

வசையிறவமுடைரென மாநுடர்கொண்டாடுகைக்குத
நசையினொடுபொருள் பெறவுஞ் செய்கின்றநற்றவத்தை
விசயவுனக்குரைசெய்தேன் மிகப்பெரியோர்செய்திடினு
மிசையவறிமற்றிதனை யிராசதமாந்தவமென்றே. (கஎ)

பேதைமையைமிகவுடைத்தாய்த் தன்னுயிர்க்கும்பிறவுயிர்க்கு
மேதமுறு பெருந்துயருங் கேடுமேயியற்றுவதா
யாதவனும்பனியுமுழன் றாற்றுகின்றவருந்தவந்தான்
றாதலருநெடுமுயாய் தாமதமாந்வமாமே. (கஅ)

வேறு

முன்செய்காரியப்பொருட்டு மின்றியேமுடித்திதனாற்
பின்பொருநற்பொருள்விளையு மென்பதுவும்பேணாதே
நன்குடையகாலத்தே நல்லிடத்தேநல்லவர்க்குத்
தன்பொருளைக்கொடுக்குமது சாத்துவிததானமே. (கக)

கொண்டுசெயத்தகுங்கருமமெனுங்குறிப்பொன்றின்றியே
பண்டுசிலர் செய்ததற்காய்ப்பரிவோடுபண்ணினவு
முண்டிதனான் மேல்விளைவென்றுணர்வோடிச்செய்வனவு
மெண்டிசையுநிறைபுகழாயிராசதமாந்தானமே.

வாயாததொரு பொருளை வழங்காதகாலத்தே
யேயாதநிலத்திடையேயிழிந்தகுலத்தவர்களுக்கே
யாயாதவறிவினொடுமப்பிரியத்தொடுங்கொடுத்தல்
சாயாதபெருந்திறலோய்தாமதமாந்தானமே. (உக)

வேறு

ஒப்பரிதாயவுண்டி யோடியாகமுறு தவந்தானமென்றுரைத்த
வப்படியெல்லாமறிவகையுனக்குமுரைத்தனனடையமற்றையா
மெய்ப்படியாமற்றிவற்றினைச்செய்துவீடுபெற்றுயர் நெறியாவ [.
தெப்படியென்னிலதனையுமுனக்குத்தெரிவகையுணர்த்துவன்கே

வேறு

ஓமென்கின்றதனியெழுத்துமுரைத்தற்கரிதற்பதமுந்
தாமங்கமழ்தார்மார்பனேசத் தென்கின்றதனிப்பதமு

மாமென்கின்றவிவைமூன்று மறிவின்பெயர்மற்றிவற்றாலே
யாமுன்புணருமறையோர்யாகந்தோன்றிற்றெனவறிவாய்.

ஓமென்றுரைத்தேவினை செய்வார்வீடுற்றவர்வீடுறுமவர்க
டாமுண்ரைத்ததற்பதத்தையுரைத்தே செய்வர்சத்தென்றே
யாமென்கின்றவிவைமூன்றும்வினைமற்றினமாயின வெல்லாங்
காமபலத்தின் மேலின்றிச்செய்வாரறிஞர்கதிர்வேலோய். (உச)

வேறு

காதலாலிந்தப்பதங்கண்மூன்றினையுங் கற்றுணர்ந்தவர்கடங்க ருத்தா,
லோதலாம்வகையாலுரைத்தலாற்றவமுந்தான முமுதலியவொழியா,
ராதலாலிந்தப்பதங்களை யுரைத்தேவினை செயத்தகுவ தென்றுரைத்தான்,
றீதிலாவுலகந்தன்னுளேயுதிப்பத்தேவகி திருவயிற்றுதித்தோன். (உரு)

பதினேழாவது
குணவிகாரவத்தியாயம் - முற்றிற்று

பதினெட்டாவது
சஞ்சேப அத்தியாயம்

ஏகமேகருதுவாரிதயமேவிளை வதோர்
போகமேயுலகிலோர்பொருவிலாவொருவனே
நாகமேயமளியாய்நளின மேலமர்வதோர்
மேகமேபணியெனாவிசயன் மேல்வினவுவான். (க)

வேறு

சந்நியாசமாவதுந்தகுந்தியாகமாவது
மென்னியாயமாகவெம்பிரானியம்புகென்னவே
வன்னிவாயுவானமாகிமண்ணுநீருமாகியோன்
றொன்னியாப்பொருட்டொகைத்திறன்சொலத்தொடங்கினான்.

காமமென்றிடும்பலன் செய்கன்மமானயாவையுந்
தாமடங்கவேயிகத்தல்சந்நியாசமாவதிங்
கேமமின்றியெவ்வினைபயன்களானயாவையுந்

தீமையென்றறத்துடைத்திருத்தறியாகமாவதே.

தீங்கியற்றுகின்றதீவினைத்திறங்கள் போலவே
யீங்கிய்ற்றுகின்றநல்வினைத்திறங்கயாவையு
மாங்கியற்றலின்றிவிட்டிருத்தலேயத்தமாச்
சாங்கியத்தையோதிடுந்தவத்துளோருரைப்பரால். (ச)

ஞானகாரணங்களாதலாலியாகநற்றவந்
தானமோடிகத்தலைத்தகாமைகூறுவாருள
ரானகாரணத்தினாலறிந்தடங்கினாற்கலா
லீனமாமிவற்றைவிட்டிகத்தலென்றிருத்தலே. (ரு)

வேறு

யாகமூன்று வகைப்படுஞ்செப்பக்கே
ளியாகமுந்தவந்தானமுமென்றிவை
மாயாலறுக்குமனத்தியை□தலா
யாவுரைக்கில்விடுகையடாததால். (சு)

என்னசெய்வதெனிலிவ்வினைகளாற்
பின்னையெய்தும்பெரும்பயனாவது
தன்னைவிட்டுச்செயத்தகுமென்பது
முன்னையோர்க்குமெனக்குமுடிவரோ. (எ)

நித்தமாயவினையினெறியினை
மத்தர்போலவொருவன்மயக்கினாற்
பித்தனாய்விடுகின்றவப்பெற்றியைச்
சித்ததாமதத்யாகமென்கின்றதே. (அ)

மெய்வத்தமுண்டென்றுவிடுவது
மையமின்றியிராசதத்தியாகமாங்
கைவரும்பலமாசைகைமாறவே
செய்வசெய்வதுசத்துவத்தியாகமே. (க)

யாதின்மாட்டிமையமொன்றின்றியே
தீதின்ஞானியுந்தியாகியுமானவன்
கோதிலின்பமுந் துன்பமுங்கூர்வினை
மீதுவேண்டல் வேண்டாமையும்வீடுமால்.

யாக்கையோடுமிசையிலிருவினை
நீக்கலாவன வல்லநிலத்திடை
வீக்கமாயவினைப்பயன் வீடினார்
போக்கலாவினை யாவையும் போக்கினார். (கக)

இன்னாதனவுமினியனவுமிரண்டுங் கூடிசைந்தவுமாய்
முன்னாநின்றவினை மூன்றுமவற்றால்வந்தமுடி பொருளும்
பொன்னானதுவுந்தொழிலும் போலிருக்குமிந்தப்பொய்மெய்யை
யுன்னாதவர்க்கேயுள்ள திவையுணர்ந்தோர்க்குளவாயுதியாவால்.

வேறு

ஓங்கியவுலகினிலுயர்ந்தநன்மையுந்
தீங்கினவாம்வினையாவுஞ்செய்தற்குச்
சாங்கிய நூலிலேயுரைத்தசாதன
மீங்கிவைவையந்தையுமெடுத்துக்கூறுவாம்.

இருப்பிடமாமுடம்பிற்றுமாருயிர்
கருத்தினை முதலியகரணங்காற்றினால்
விருப்பொடுவருந்தொழிலிவற்றின்மெய்ப்பர
னருத்தமாமொழியெனவாகவைந்தரோ.

வாக்கினாலாதன் மெய்மனத்தினாதறம்
யாக்கையலாதலிவ்வுலகிலியாவரும்
வீக்குவார்சிலையினாய்வினையிரண்டிலொன்
றாக்குநாளிங்கிவையைந்தும் வேண்டுமால். (கரு)

இவ்வகையேவரும் வினையிரண்டையு
மெய்வகையாகயா னன்றிவேறிலைச்
செய்வகையானெனச் சிந்தைமேயினா
னுய்வகைவேறிலா னுணர்வுமாய்ந்துளான். (கக)

வேறு

யாவனொருவன்றன்னுடம்மை யானென்றிருக்குமியல்பொழிந்தா
னியாவனொருவன் றனகரணமி யாதொன் றோடும்விழைந்திரா
னாவவனிவ்வுலகத்தை யடையக்கொன்றானாயினுமோர்

பாவமில்லையவன் கொன்ற பழியுமில்லைபார்மன்னா. (கஎ)

அறிவுமறியப்படும்பொருளு மறிவானொருவன்றானுமாய்
நெறியில்வினைகள் விதிக்கின்ற விதியினிலைமைநிற்பதுதான்
செறியுந்தொழிலுஞ்செய்வானுஞ் செய்தற்குரியகரணமுமாய்க்
குறியில்வினைகண்மூடிவிருப்ப தின்னஞ்சிலவுங்கூறக்கேள். (கஅ)

ஆன்றவறிவுங்கருமமுமக் கருமங்களையாக்கிடுவானு,
மூன்றவுணரும்புத்தியொடுதிருத்தி யெனவென்றுரைத்தனவுந்,
தோன்றவிளை யுமின்பமுமுன்சொன்ன குணத்தின்றொடர்பாலே,
மூன்றுவகையாமோரொவ்வொன் றவற்றின்றிறநான் மொழியக்கேள்.

நன்றாய்ஞானத்திரளாகி நானாவிதமாய்விரிந்தெங்கும்
பொன்றா நின்றபூதங்கடோறும் பொன்றாப்பொருளாகி
யொன்றாய்நிற்பதொன்றதனை யப்படியேயுணருமுணர்வதனை
யன்றாமென்னார்சாத்துவித ஞானமெனவேயமைப்பரால்.

ஊனப்படுமிவ்வுடறோறுமுள்ள பொருளை யுணராதே
யீனப்படக்காண்கின்றதிரா சதமாஞானமதுவன்றி
ஞானத்திரளாய்நின்றதையோ ருடம்பினிடையுநாட்டிடையோர்
தானத்திடையுமடங்கக்காண் பதுதாமதமாஞானமே. (உக)

வேறு

வீதலும்பற்றுமேலோர் வினைப்பயன் வேண்டல்வேண்டாக்
காதலொன்றின்றிச்செய்யுங் கருமஞ்சாத்துவிதகன்ம
மாய்தரும்பலத்தினோடு மகங்கரமத்தினோடு
மேய்தருங்கருமமெல்லா மிராசதகருமமாமே. (உஉ)

கொலைபெரும்பற்று மேலோர் கூறியநீதியோடுங்
கலைதெரிந்துணர்ந்துமெய்மை கடைப்பிடியாமையார்க்கு
மலைவருங்கேடு சூழ்தலனைத் தினுமொன்றலோடுந்
தலைவரச்செய்வதெல்லாந் தாமதகருமமாமே.

பற்றுமாங்காரந்தானும் பழுதறத்துறந்தியாவு
முற்றெழுமுயற்சியோடு நிலைமையினோடுமொன்றி
பெற்றுமோரிழவுபெற்றி துன்பமீதின்பமென்று
சற்றுமோர்சலிப்பிலாததலைவன் சாத்துவிதனென்பான். (உச)

வேறு

வினைப்பயன்றனை வேண்டலும் வேட்கையு
மெனைத்துமியார்க்குமிடாமையுந்தூய்மையி
னினைப்புநீடலுநெஞ்சுமகிழ்தலு
மனைப்பவாழ்வரிராசதமாந்தரே. (உரு)

மனமொருக்கலும்வான்கலை நூல்களைத்
தனமெனக்கொடுகற்கலுந்தக்கவ
ரினமகிழ்த்தலுமின்றியுண்டாகிய
சினம்விடுக்கலார்தாமதஞ் சேர்ந்துளார். (உசு)

ஈனமற்றதுறவறமில்லறம்
ஞானம்பற்றொடுநல்வினை தீவினை
யானவஞ்சுவவஞ்சத்தகாதெனத்
தானறிந்ததுசத்துவபுத்தியே. (உஎ)

தருமம்பாவந்தனக்குச்செயத்தகுங்
கருமஞ்செய்யத்தகாதகருமங்க
ளருமையாலறியாதவறிவதே
யிருமையாயவிராசதபுத்தியே. (உஅ)

பாவமாகத்தருமத்தைப்பார்க்கையு
மாவதாமென்றடாதது நொக்கலுந்
தீமைசெய்கின்றசிந்தனை தீங்கிலே
போவதாவதுதாமதபுத்தியே. (உக)

மனஞ்செயுந்தொழின்மன்னுயிரின்றொழி
லினஞ்செயிந்தியஞ்செய்தொழிலென்றிவை
கனஞ்செய்தேறிலுங்கண்டுபொறுத்தலுஞ்
சினஞ்செயாமையுஞ்சாத்திகதிர்த்தியே.

பண்ணிக்காமந்தரும்பயன்கைக்கொள்வா
னெண்ணித்தாங்குத்திருத்தியிராசதங்
கண்ணிற்சோகங்களிப்புறக்கம்பய
நண்ணித்தாங்குந்தமப்பொறைநாளுமே.

துன்பமாய்விடம்போன்றுதொடக்கத்தி
லின்பமாகிவிளைவிடம்யாவர்க்கு
மன்பவாரமுதேயெனலாவதா
மென்பசாத்துவிகந்தருமின்பமே.

பொருத்தமாய்ப்புலனோடு பொறியிலே
யருத்தமாயெழுந்தாரமுதென்னலாய்
விருத்தமாய்விளைந்தால்விடமாகியே
யிருத்தலாகுமிராசதவின்பமே.

தொடருறக்கமயக்கொடுசோம்புமேற்
படவுதித்தவைபண்ணும்பொழுதினுங்
கடன்விளைந்துமுடிந்தகாலத்தினு
மிடர்விளைப்பதுதாமதவின்பமே.

வேறு

இந்தவியற்கையினாலிக்குணங்களைவிட்டவரில்லை
யந்தணர்க்குமரசர்க்கும்வணிகர்க்குஞ்சூத்திராக்குந்
தந்தமியற்கையவாயகுணமூன்றின்றன்மையினில்
வந்தவினைத்திறமவற்றையுரைப்பன் கேண்முடிமன்னா.

வேறு

கறைசெயைம்புலன்களைக்கரணநான்குடன்
றுறைதுறையடக்கலுந்தவமுந்தூய்மையும்
பொறையொடு கல்வியும் பொருந்துஞானமு
மறையவர்தொழிலென வகுக்கப்பட்டதே.

தலைமையுங்கொடையொடுதறுகணாண்மையு
நிலைமையுங்கீழ்ப்படாநெஞ்சினீட்டமுங்
கொலைபயில்போர்களிற்புறங்கொடாமையுஞ்
சிலைமலிதோளினாயரசர் செய்கையே.

உழுதொழில்பசுக்களை யோம்பல்வாணிபம்
வழுவறச்செய்தொழில் வணிகர்வாழ்க்கையாம்
பழுதறவிவர்களைப் பாதுகாத்தலே
விழுமியதொழில்கள் வேளாளர்க்கென்பவே.

வேறு

தீராவகைதன் செயலேசெயவே
நாராயணனாமுதனாயகனுக்
காராதனையா மதனாலவனே
வாராவழியாம் வரமேதருமால்.

வேறு

அல்லாவினைதா னழகாய்வரினுஞ்
செல்லார்பெரியோ ரவைசெய்வதனிற்
றொல்லார்குலமே தொடருந்தொழிலே
பொல்லாவெனினுஞ் செயலேபொருளே.

வேறு

கனையெரிபுகையோடன்றிக் காணமுன்படாமைபோல
வினைகளுங்குற்றந்தன்னை விட்டிராதாதலாலே
யனையவென்றிகழ்தலாகா வடுத்தகாரியங்கடம்மை
நினைவருந்தருமமென்று செய்கையேநீதியெல்லாம். (சக)

வேறு

வெல்லப்பட்டமனத்தினனாய் வேறொன்றினையும் வேண்டாதே
யல்லற்படுக்குமுடற்பற்றுமறவே யறுத்தான்வினையடையச்
செல்லச்செல்லவறுத்தானா மதனாற்சித்தமுடிவாகச்
சொல்லப்பட்டகரணங்க ணான்குந்தூய்தாய்விடுமன்றே.

சொன்னகரணமவைநான்குந் தூய்தாய்விடவத்தூய்மையினா
லுன்னவரியப்ரும்பொறையை யுடையனாகுமப்பொறையா
லின்னல்செய்யும்பொறியைந்து மிராகத்துவேடமெனுமிரண்டு
மன்னதன்னைநலியாமைமாற்று மவற்றைமாற்றினால்.

காடுமலையுமலைமுழைஞ்சுங் கடுமாமுதலைநலிவில்லா
வோடும்புனலாறுள்ளிட்டவிடமே யுறைளாய்க்கொண்டு
தேடும்பொருளொன்றின்றியே சிறிதேயுண்டுசென்றெங்கு
மாடுமனம்வாய்மொயாக் கையடங்கப்பெறுமாலவனையா.

சொனனவிவைபோடங்கிடவே தோன்றுங்களிப்புங்காமமுமுன்
பென்னதியானென்கின்றதுவு மெரிபோல்வெகுளியொடுவலியு
முனனறவிர்ந்துசாந்திபெறுஞ் சாந்திபெறவேயோரிடத்தும்
பின்னமயை தொன்றாகிநின்ற பொருளின் பேருருவாம். (சரு)

அந்தவுருவானவன் பின்னையாதேவரினுமழிவுறா
னிந்தவுலகத்துயிர்க்கெல்லா மொத்தேயிருக்குமீங்கிவனும்
பந்தமறவிட்டெனையறியும் பத்திபெறுமப்பத்தியினாற்
சிந்தையிடையேயெனைத்தெளியு மதனாலெனையேசேருமால்

என்னைப்பற்றிக்கொடுநின்றே யெல்லாவினையுமியற்றினாற்
பின்னைப்பிறவாப்பெரும்பத மென்னருளினாலே பெறுங்கண்டாய
நின்னைத்தொடரும்வினையெல்லா மென்னை நினைந்தேசெயில்வினைக
டன்னைக்கடத்தற்கருந் துன்பமெல்லாங்கடக்கத்தகுதியால். (சஎ)

வேறு

ஒன்றியமனத்தினாலே யானுரைக்கின்றவுண்மை
நன்றிதென்றுணராவாயி னாசமேயடைதிமற்றீ
தன்றியுமரசர்க்கெல்லா மடுத்தகாரியமாயுள்ள
வென்றியையடையாயேனும் வேறினிவிளைவகேளாய். (சஅ)

வேறு

விரைசெய்தார்மன்ன வேண்டலையாயினுங்
கரைசெய்மாயையுங் காலுறவாழ்த்திடு
மரசர்தங்குணமாகிய வாண்மையே
புரைசெய்வாளமர்க்கே புகுவிக்குமால். (சக)

பொறிகளுண்ணின்றவற்றின் புணர்ப்பெலா
மறியவாட்டினன் போலாக்கைகடொறு
மறைவினின்றுதன் மாயையினால்வினைக்
குறிகள்செய்விப்ப னீசனென்றேகொள்வாய்.

வேறு

வேறப்பாவொருவர்க்கு விளம்புதன்

மாறப்பட்டபொருளின் வகையெலாங்
கூறப்பட்டதுனக்கிக் குறிகளை
யேறப்பார்த்துனக் கேறியவாசெய்வாய். (ருக)

வேறு

தீதகலாதெனவுளவோ விவன்வேண்டிலெனத்தேறி
லோதலினானினைத்தலினா லெனைப்போக்கியொன்றறியா
யாதலினாலியாவர்களுமறி யாதவொருபொருளைக்
காதலினாலுனக்கின்ன முரைக்கின்றேன்கடைப்பிடிநீ. (ருஉ)

என்னையேநினைந்தெழவுன் மனத்தினை யென்னிடையேவை
யென்னையேநினைந்திருநீ மற்றெனக்கேபூசனைசெ
யென்னையேகுருவாக்கொள்ளெப்போதுமிதுசெய்யி
லென்னையேவந்தடைதியிது மெய்யேயிதுமெய்யே.

இருவேறுவகையாய வெவ்வேறுவினைகளையு
ம்ருவேனென்றறவிட்டு மாயையினான்மறைப்பரிய
வொருவனையேபற்றுதியப் பற்றினாலுனைப்பிறவிக்
கருவேலைகடந்தேறக் கைதருவேன்கதிர்வேலோய்.

மற்றுனக்குச்சொல்லியவிம் மறைப்பொருண்மாதவமிலர்க்குங்
குற்றமறுத்தறிவருளுங் குருவழிபாடிலாதவர்க்குஞ்
செற்றமனச்சழக்கர்க்குமெனை நினையாத்திறத்தவர்க்கு
மற்றமறத்தெரிந்துரைக்கை யடாதென்றேயறிகண்டாய். (ருரு)

எல்லாப்பொருட்கும்பரமாமிப்பொருளை யென்னன்பர்க்கிசையச்
சொல்லாற்றெரிவிப்பவரன் புத்துன்னியென்பாலெனையடைவர்
நல்லார்களின்மறெனக்கினிய நன்மைசெய்கின்றாருமவ
ரல்லாதவரிப்பொழுதுமிலை மேலுமவர்களுள ராகார். (ருசு)

ஏயவிருவோம்பேசியவிவ் வறநூலினையேயெடுத்துரைப்பா
னாயஞானயாகத்தா லெனையேயாராதிக்கின்றான்
மேயபொறாமைதனைவிட்டு விருப்பாலிதனைக்கேட்பானுந்
தீயவினைகளறவிட்டுத் தேவருலகஞ்சேருமால். (ருஎ)

வேறு

என்னதுமொழினாலியா னியம்பியஞானத்தாலே
மன்னவவுனக்குவந்த மயக்கெலாங்கெட்டதோயான்
சொன்னவிப்பொருள்களெல்லாந் துணிந்தனைகொல்லோவென்று
நன்னகைகூரநின்று நாயகனருளிச்செய்தான். (ருஅ)

வேறு

மன்னவவென்மாய மதுசூதமறைநாலின்
முன்னவமொழிந்த திருவாய்மொழிகளாலே
யென்னகுறையுண்டினி யெனக்கெனவியம்பித்
தன்னகமகிழ்ந்திவை தனஞ்சயனுரைப்பான். (ருக)

பையரவிலேயினிது பள்ளியமர்வோனே
வையமுமிவ்வையமதின் மன்னுயிர்களியாவுஞ்
செய்யும்வகையுற்றது சிதைத்தலதுதானு
மெய்தெரியினீமுன் விளையாடும்வகையன்றோ.

அணித்தகையசோதி யமலாவுன்னருளாலே
கணித்தலரிதாய பிறவிக்கடல்கடந்தேன்
பிணித்தபெருமாயை மயல்கெட்டதுபிரானே
பணித்தபணியல்லது செயத்தகுவதுண்டோ. (சுக)

வையமுழுதுண்ட திருவாய்மலர்திறந்திட்
டுய்யயேன்முனுரை செய்தவுரையாலே
யையமுமகன்றதென யாப்புமறவிட்டேன்
செய்வதினியுன்றனருளின் செயல்களன்றோ.

வேறு

பிணித்தபிறவிப்பெருந்தளையைப்பெயர்த்தென்பெரும்பேதை
மைநோயைத், தணித்தவரசேயெனக்குத்தான்றகுமேயாகத்தகா தாகத்,
துணித்ததிறல்வான் போரினையே தொடங்குகென்றுநீயிங்கு,
பணித்தபணியான் செய்வனெனப்பார்த்தனவனுமுடன்பட்டான்.

வேறு

மாதவனுந்தனஞ்சயனுந் தங்களிலேமகிழ்ந்துரைத்த
வோதரியபொருளினை நீ யுணர்ந்தவாறெங்ஙனெனில்

வேதவியாதனனுடைய மெய்யருளைமிகவுடையே
னாதலினாலறிந்தனன்வே றறியலாம்வகையுண்டோ. (கச)

அப்பொருளை நினைதோறு மற்புதமாயக * மகிழ்வு
மெப்பொழுதும்வருமவன்றா னிருக்கின்றவகைவிரித்த
வொப்பரிய திருக்கோல முணர்தோறுமுணர்தோறுஞ்
செப்பரியபெருங்களிப்பென் சிந்தையுளே திகழுமால். (சரு)

எஞ்சலிலாப்பொருளனைத்து மிப்படியேபுகுந்ததெனச்
சஞ்சயனன்றெடுத்துரைத்து நூற்றுவர்க்குத்தாதையோய்
வஞ்சனையேகண்ணாக வாழ்கின்றமற்றாவர்க்குப்
பஞ்சவரேவலியவரென் றிவ்வண்ணம்பகர்வுற்றான். (சசு)

வேறு

திருவறநீதி செயம்புகழெல்லா
மருவருமாயைசெய் மாதவன்வாய்மை
தருமம்விடாத தனஞ்சயனென்னு
மிருவருநின்ற விடத்தனவென்றான். (சுஎ)

என்றபொருட்டிற மிப்படியேயாய்க்
குன்றமெடுத்தருள் கொண்டல்பணிப்பான்
வென்றபுலத்து வியாதன்விரிப்பா
னின்றவருக்கிது நேர்படவற்றோ. (சுஅ)

*மகிழ்வும் - என்ற உம்மை எதிரது தழீய எச்சவும்மை.

வேறு

வேதநூல்களின் முடிவினை வியாதனிற்பின்னா
ளோதமாக்கடலுலகி லுண்டாக்கியவுரவோன்
கோதிலாநெறியுணர்ந்த கோவிந்தமாமுனிவன்
பாததாமரைபற்றி வீட்டின்பமேபடைத்தான். (சுக)

வேறு

ஆற்றியல்வழுவிய புலன்களைந்தையும்
பாற்றியசங்கர பகவற்பாதனென்

 றேற்றியபெரினா னருளினாலியான்
சாற்றினனிப்பெருந் தருமநூலையே.

பதினெட்டாவது
சஞ்சேபவத்யாம் முற்றிற்று

பகவற்கீதை முற்றுப்பெற்றது.
ஸ்ரீகிருஷ்ணசகாயம்
சர்வஞ் சின்மயம்.